


AHARAM

# அகரம்

தரம் 5 - 11 வரை
எண்: 10 எழுத்து: 04 ஏப்ரல் - 2016
www.aharam.lk



## அதிசய பாலைவனம் சஹாரா

பசுமையான காடுகள், அழகிய கடல், ஆற்றங்கரைகள் கொண்ட சஹாரா மீண்டும் பசுமையாக மாறுவதில் என்ன ஆச்சரியம்!

## "எனது சாதனைகள் மூலம் தாய்நாட்டுக்கு சேவையாற்ற விரும்புகிறேன்"

எல்.எம். மின்ஹாஜ்

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த் துடிப்புள்ள முஸ்லிம் பெண்மணி


# தவக்குல் அப்துஸ் ஸலாம் காலித் கர்மான்



- இவர் 1979 ஆம் ஆண்டு பெப்ரவரி இரண்டாம் திகதி யெமனில் தாயிஸ் என்ற பிரதேசத்தில் பிறந்தார்.
- மனித உரிமை செயற்பாட்டாளராகவும் சிறந்த ஊடகவியலாளராகவும் அல் இஸ்லாஹ் அரசியல் செயற்பாட்டாளராகவும் தற்போது இருந்து வருகிறார்.
- பெண்கள் பாதுகாப்பு, பெண்கள் உரிமை என்பவற்றுக்காக வன்முறையில்லா போராட்டங்களினூடாக சமாதானத்துக்கு வித்திட்டு 2011 ஆம் ஆண்டு தனது 32 ஆவது வயதில் நோபல் பரிசு பெற்றுக் கொண்டார்.
- நோபல் பரிசு பெற்ற யெமன் நாட்டின் முதலாவது பிரஜையாகவும் முதல் அரபுப் பெண்மணியாகவும் இரண்டாவது முஸ்லிம் பெண்மணியாகவும் இவர் காணப்படுகிறார்.
- இரும்புப் பெண்மணி, புரட்சியின் தாய் என்ற சிறப்புப் பெயர்களைக் கொண்ட இவர் மனித நல ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமைக்காக பலமுறை யெமன் அரசாங்கத்தால் சிறைபிடிக்கப்பட்டார்.
- கை விலங்கில்லா பெண் ஊடகவியலாளர் என்ற அமைப்பை நிறுவி பல எழுத்துக்களையும் வெளியிட்டுள்ளார்.
- கடந்த 2011 ஆம் ஆண்டு உயிர் அச்சுறுத்தல் காரணமாக துருக்கிய அரசாங்கம் இவருக்கு பிரஜாவுரிமை வழங்கியதால் அவர் தற்போது துருக்கியில் வசித்து வருகிறார்.
- கடந்த 16.03.2016 இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06



“அல்லாஹ்வின் படைப்புகளில் எந்தவொன்றும் வீணுக்காகப் படைக்கப்படவில்லை என்பதற்கு இதுவும் ஒரு சிறந்த சான்று. வரண்ட பாலைவனத்தின் மூலம் எத்தனையோ ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள ஒரு மலைக்காடு உயிர் வாழ்கின்றது.”


38




22



32



30



AHARAM அகரம்

எண்: 10 - ஏப்ரல் : 2016 - எழுத்து: 04




பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd
(அதிபர், களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை)

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர்

துணை ஆசிரியர்
எஸ். ஸஹீர் அப்பாஸ் (இர்பானி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

## பாடத்திட்டம்


| | |
|---|---|
| புலமைப்பரிசில் | 40 |
| அறபு மொழி | 14 |
| வரலாறு | 20 |





36

தொடர்புகளுக்கு:

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
Email : aharamlp@gmail.com

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடன் ஆசிரியர்...

# கண்ணைத் திறக்க உதவும் ஒரே ஆயுதம் கல்வி

செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச் செல்வ மாகும். கல்வி மனித வாழ்க்கையில் முக்கிய பங்காற்று கிறது. இந்தக் கல்வி எனும் அழியாச் செல்வத்தைக் கற்று வாழ்க்கையில் முன்னேறவே நாம் பாடசாலைக் குச் செல்கின்றோம். பாடசாலை வாழ்வில் நாம் எந் தளவு பயனுள்ள கல்வியைக் கற்கிறோமோ அதுதான் எமது எதிர்கால வாழ்க்கைக்கு பயனுள்ளதாக அமை யப் போகிறது. மனிதனது வாழ்வெனும் கண்ணைத் திறக்க உதவும் ஒரே ஆயுதம் கல்வி மட்டுமே.

உலகில் எத்தனையோ அல்லாஹ்வின் படைப்பி னங்கள் இருந்த போதிலும் சிறந்த, அழகிய படைப் பாக ஆறறிவு பெற்ற மனிதனே போற்றப்படுகின்றான். பிற உயிரினங்களைக் காட்டிலும் மனிதனே அதிகம் மதிக்கப்படுகின்றான். இவ்வாறு, மனிதன் மதிக்கப் பட முதன்மைக் காரணம் அவன் பெற்ற கல்வியேயா கும். உலகில் தோன்றிய அனைத்து மார்க்கங்களும் மதங்களும் கல்வியின் மேன்மையை போதிக்க மறந் ததில்லை; போதிக்காமல் இருந்ததுமில்லை. குறிப் பாக, இஸ்லாமிய மார்க்கம் அதற்கான அழகிய முன் மாதிரிகளையும் வழிகாட்டல்களையும் அழகாகத் தந் துள்ளது.

அல்குர்ஆன் தனது முதற் போதனையாக கல்வி யையே வலியுறுத்துகிறது. இன்றைய நவீன உலகில் அறிவை யாரெல்லாம் ஆயுதமாக முன்னிறுத்துகிறார் களோ அவர்கள்தான் சாதனை படைக்கின்றனர். 19 ஆம் நூற்றாண்டில் தரைப்படை எவர் வசம் காணப்பட் டதோ அவர்கள்தான் உலக ஜாம்பவான்களாகத் திகழ்ந் தார்கள். 20 ஆம் நூற்றாண்டில் ஆகாயப் படை எவர் கைவசம் காணப்பட்டதோ அவர்கள் இவ்வுலகை ஆண்டு வந்தார்கள். தற்போது அந்தக் காலம் மலை யேறிவிட்டது. பேனையெனும் எழுத்தாயுதம் எவர் கைவசம் காணப்படுகிறதோ அவர்கள்தான் இன்று இவ் வுலகை ஆட்டி வருகின்றனர் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

'அறிவுடைய ஒருவனை அரசனும் விரும்புவான்' என்பது முதுமொழி. கரையில்லாக் கல்வியை குறை யில்லாமல் கற்றால் உலகம் எம்மைப் போற்றும். இந்தக் கல்வியை சரியாகப் பெற்றவர்கள்தான் இன்று உலகை வியக்க வைக்கின்றனர் என்பதையும் மறுக்க முடியாது. அதே சமயம், அறிவைத் தேடுதல் என்ற விடயம் தொழில் மையமாக மாத்திரம் இருக்க முடி யாது; இருக்கவும் கூடாது. மாற்றமாக, எமது கல்வி சமூகத்துக்கும் நாட்டின் தேவைக்கும் துணை நிற்பதாக அமைந்தால்தான் அந்தக் கல்வியின் உயர் பிரதிபல னைக் காண முடியும். அதேபோல, நாம் சிறந்த ஆற் றல் மிக்கவராக மிளிர்ந்தோமேயானால் அதற்கேற்ற தொழிலும் எமது திறனுக்கு ஏற்ற ஊதியமும் எம்மை வந்தடையும் என்பதில் ஐயமில்லை.

இந்த அறிவைத் தேடும் மாணவர்களுக்கு கல்வி எந்தளவு அவசியமோ அந்தளவு ஓய்வும் இன்றியமை யாதது. ஓய்வின் அவசியத்தைக் கருதியே பருவகால விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. இன்னும் ஒரு சில நாட்களில் மாணவர்களாகிய நீங்களும் இந்த விடு முறையை பல ஆசைகளோடு எதிர்பார்த்தவர்களாக இருப்பீர்கள். பாடசாலை விடுமுறையை பல பய னற்ற சுற்றுலாக்களிலும் வீண் களியாட்டங்கள், கைய டக்கத் தொலைபேசி, இன்டர்நெர்ட் ஆகியவற்றிலும் சதா பொழுதைப் போக்குகின்றனர். அவ்வாறன்றி, பாடசாலை விடுமுறையை எவ்வாறு பயனுள்ளதாக மாற்ற வேண்டும் என்பதையும் நாம் சிந்திக்க வேண் டும். இந்த விடுமுறையை நான் எவ்வாறு அமைக்கப் போகிறேன் என்பதை தற்போதே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

உறவுகளை சந்தித்தல், பெற்றோருக்கு உபகாரம் புரிதல், அல்குர்ஆனுடனான உறவை அதிகரித்தல், அதில் சிலவற்றை மனனமிடல், மனதை தளர்வாக வைக்கும் திறனான பொழுதுபோக்குகள், மொழிசார் பயிற்சிகள், ஆழ்ந்த வாசிப்பு ஆகியவற்றில் ஈடுபடுவ தன் மூலம் வாழ்வில் பல மாற்றங்களுடனான முன் னேற்றங்களைக் கண்டுகொள்ளலாம். குறிப்பாக, சிந் தனைத் திறனை அதிகரிப்பதில் வாசிப்பு பாரிய பங் காற்றுகிறது. சுவாரஷ்யமான நாவல்கள், கதைகள் அடங்கிய புத்தகங்களை வாசிப்பதனால் புத்துணர்ச்சி, தெளிவு, சாதுரியம், புதுமை படைத்தல் போன்ற அவ சியமான, திறன் மேம்பாட்டுக்குத் தேவையான ஆளு மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, மாணவர்களாகிய நீங்கள் இனி வருகிற விடுமுறைகளில் மேற்காட்டிய நன்னெறி வழிகாட் டல்களை தங்கள் ஓய்வு நேரத்தில் பிரயோகித்தால் நல்ல பலன்களையும் பாடசாலை வாழ்க்கையில் சிறந்த தேர்ச்சியையும் தனிப்பட்ட வாழ்வில் பல முன்னேற் றங்களையும் கண்டுகொள்ளலாம், இன்ஷா அல்லாஹ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ மூஸா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"நல்ல நண்பனுக்கும் கெட்ட நண்பனுக்கும் உதாரணம் கஸ்தூரியை சுமந்திருப்பவனுக்கும் கொல்லனுக்கும் ஒத்ததாகும். கஸ்தூரியை சுமந்திருப்பவன் உனக்கு அதனை தடவி விடலாம் அல்லது அதிலிருந்து நீ கொஞ்சம் வாங்கிக் கொள்ளலாம் அல்லது நறுமணத்தையாவது நீ நுகரலாம். கொல்லனோ உனது ஆடையை எரித்து விடுவான் அல்லது அவனிடமிருந்து துர்நாற்றத்தை நீ நுகர்வாய்." (புஹாரி)

உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் பல வகையான உறவுகளைக் கண்டு கொள்கின்றான். அவ்வாறு அவன் கண்டுகொள்கின்ற உறவுகளில் பிரதான ஓர் உறவாகக் காணப்படுவதே நட்பு ஆகும்.

நட்பினால் மனிதன் பல நன்மைகளை பெற்றுக் கொள்கின்றான். தனது பெற்றோரிடத்தில் சொல்ல முடியாத பல உளக்கிடக்கைகளை நண்பனிடம் சொல்லி ஆறுதலடைவது முதல் சுவனம் நோக்கிய பாதை வரை நன்மைகள் நீள்கின்றன. இதனால் இஸ்லாமும் நட்பை உயர்ந்த இடத்தில் வைத்து நோக்குகின்றது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நட்பின் உன்னதம் குறித்து பின் வருமாறு எடுத்துரைத்தார்கள்:

''நண்பர்களில் அல்லாஹ்விடத்தில் சிறந்தவர் அவர்களில் யார் தன்னுடைய நண்பனிடத்தில் சிறந்தவராக இருக்கின்றாரோ அவராவார்.'' (திர்மிதி)

ஸஹாபாக்களும் பிறருக்கு நல்ல நண்பர்களாக இருந்ததுடன் தமது நல்ல நண்பர்களை அடிக்கடி சந்தித்துக் கொள்வதில் பேராவல் கொண்டவர்களாக காணப்பட்டார்கள். ஏனெனில், அந்த நண்பர்கள் அல்லாஹ்வை நினைவூட்டி, உள்ளங்களை மென்மையாக்கி வைப்பவர்களாக இருந்தனர்.

அழகிய நட்பு அல்லாஹ்வுடைய திருப்பொருத்தத்தை பெற்றுத் தரக் கூடியதாக உள்ளதால் நபியவர்கள் நல்ல நண்பனை நாம் தேர்வு செய்து கொள்ள வேண்டும் என சுட்டிக் காட்டியுள்ளதையே விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

ஏனெனில், ஒரு மனிதனை நல்லவனாகவும் தீயவனாகவும் மாற்றுவதில் அவனுடைய நட்பு பாரிய பங்களிப்பை செலுத்துகின்றது. இன்றும் பல இளையவர்கள் தமது நண்பர்களின் ஊக்குவிப்பினாலும் ஒத்துழைப்பினாலும் போதைப்பொருள் பாவனையாளர்களாகவும் பாலியல் சேட்டையாளர்களாகவும் உருவாகியுள்ளனர். இதனையே நபியவர்கள் அழகிய முறையில், ''ஒரு மனிதன் தனது நண்பனின் மார்க்கத்திலே இருக்கின்றான்'' என்றார்கள்.

நாமும் எமது பாடசாலை வாழ்வில் பல நட்புக்களை ஏற்படுத்திக் கொள்கின்றோம். எமது நட்பும் சிறந்த நட்பாக, இஸ்லாம் அங்கீகரித்துள்ள நட்பாக இருந்துவிட வேண்டும். ஏனெனில், உண்மையான நண்பன் சுயநலம் கொண்டவனாக இருக்க மாட்டான். எப்போதும் எமக்காக பிரார்த்தனை செய்பவனாக இருப்பான். குறைந்தது அவனுடைய நண்பனாக நாம் இருக்கின்றோம் என உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சியையாவது பெற்றுக் கொள்வோம்.

அல்லாஹ்வும் சிறந்த நண்பர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைவதுடன் மறுமையில் அவர்களுக்கு அர்ஷின் நிழலை வழங்க காத்துக் கொண்டிருக்கின்றான்.

அதேபோன்றுதான் கெட்ட நண்பன். அவன் எமக்கு எந்த தீமையும் செய்யாவிட்டாலும் அவன் மூலம் எந்த நன்மையும் எதிர்பார்க்க முடியாது. அவனது தீய பழக்க வழக்கங்கள் மற்றும் அவனுக்கு சமூகத்தில் இருக்கின்ற கெட்ட பெயரை நாமும் பெற வேண்டிய நிலைக்கு உள்ளாகுவோம்.

நாமும் நண்பர்களை தெரிவு செய்கின்றபோது அவர்களுக்கு நாம் நல்லவர்களாக இருப்பதுடன் அவர்கள் எம்மை சுவனத்தின்பால் அழைத்துச் செல்லக் கூடியவர்களா என்பதை மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

எமது நண்பர்கள், அல்லாஹ்வுக்காக எம்மை நட்புக் கொள்கின்றவர்களாக, நன்மையை ஏவி தீமையை தடுக்கின்றவர்களாக, கெட்ட பழக்கவழக்கங்கள் இல்லாதவர்களாக, மன்னிக்கும் தன்மை கொண்டவர்களாக, வாய்மையாளர்களாக, கோபம், பெருமை கொள்ளாதவர்களாக, மார்க்க அறிவு உள்ளவர்களாக, நேரத்தை வீண்விரயம் செய்யாதவர்களாக இருப்பது அவசியமாகும்.

எனவே, நபியவர்கள் சொல்லியிருக்கின்ற பிரகாரம் நல்ல நண்பர்களை ஏற்படுத்தி இம்மையிலும் மறுமையிலும் சிறந்த மனிதர்களாக மாற முயற்சிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆனிய களஞ்சியம்

ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்

தொடர் 08

# அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள கோத்திரங்களும் சமுதாயங்களும்



## அன்ஸாரிகள்

அல்அன்ஸார் என்றால் உதவியாளர்கள் என்று பொருள்படும். மக்கத்துக் குறைஷிகளால் இழைக்கப்பட்ட இன்னல்கள் தாங்காது மதீனாவுக்கு இடம்பெயர்ந்த முஹாஜிர்களுக்கும் இறைத்தூதர் அவர்களுக்கும் உடலாலும் பொருளாலும் அளப்பரிய உதவி புரிந்தவர்களே மதீனா வாழ் அன்ஸாரிகள் ஆவர். இஸ்லாமிய வரலாற்றில் அன்ஸாரிகளினது பங்கு மகத்தானதாகும். இறை விசுவாசம் ஒன்றே அவர்கள் முஹாஜிர்கள் மத்தியில் சகோதர வாஞ்சையை ஏற்படுத்தப் போதுமானதாக இருந்தது. தங்களது உரிமைகளையும் சொத்துக்கள், உடைமைகள் என்பவற்றையும் முஹாஜிர்களுக்காக எப்போதும் வழங்க தயாராக இருந்தார்கள். அல்லாஹ் அன்ஸாரிகளை பொருந்திக் கொண்டதாக அல்குர்ஆன் அவர்களைப் பற்றி சிலாகித்து கூறுகின்றது.

## குறைஷிகள்

நபி இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகனான இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வழித்தோன்றலாக வந்த குறைஷிக் கோத்திரமே அன்றைய அரேபிய தீபகற்பத்தின் உயர் கோத்திரமாக விளங்கியது. இவர்களே அன்றைய கஃபாவை பரிபாலனம் செய்யும் உரித்துடையோர்களாக விளங்கினர். இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம்) அவர்கள் குறைஷிக் கோத்திரத்திலேயே பிறந்தார்கள். கஃபாவை பரிபாலனம் செய்யும் உரிமை காரணமாகவும் புவியியல் ரீதியான அமைவிடம் காரணமாகவும் குறைஷிகள் செல்வச் செழிப்புடையோர்களாக வாழ்ந்தனர். இருப்பினும், இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம்) அவர்கள் இறைவனின் தூதை குறைஷிகள் மத்தியில் எத்தி வைத்தபோது அவர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தனர். இறைத்தூதை எத்தி வைக்கும் பணியை நிறுத்த முடியாமற்போனதும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம்) அவர்களையும் அவரது தோழர்களையும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கினர். இதன் தொடர்ச்சியாகவே மதீனாவுக்கான ஹிஜ்ரத் பயணம் அமைந்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேதமுடையோர்கள்

அஹ்லுல் கிதாப் என்றால் வேதத்தை உடையோர்கள் என பொருள்படும். அல்குர்ஆன் அருளப்பட முன்பு புனித நூல் வழங்கப்பட்ட சமுதாயத்தையே இது குறிக்கின்றது. அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசித்து நற்செயல்கள் புரிந்து வந்த சிலரும் அதில் அடங்குவர். வேதத்தை உடையோர்களுடன் மிக அழகிய முறையில் விவாதம் புரியுமாறு அல்லாஹ் முஸ்லிம்களுக்கு ஏவியுள்ளான். இறுதி இறைத்தூதர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம்) அவர்களை நிராகரித்தமை, மூதாதையர்களை கடவுளாக்கியமை ஆகிய காரணங்களுக்காக அல்குர்ஆன் வேதத்தை உடையோர்களை சாடுகிறது.

## பனூ இஸ்ராயீல்

எகிப்தை ஆட்சி செய்த கொடுங்கோல் அரசன் பிர்அவ்ன் என்பவனின் கொடுமைகளிலிருந்து மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் காப்பாற்றிய மக்களே பனூ இஸ்ரவேலர்கள் ஆவர். மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இறைவனிடமிருந்து பெற்ற தவ்றாத் வேதத்தினை பனூ இஸ்ரவேலர்களுக்கு போதித்தார்கள். அவ்வேதத்தில் பனூ இஸ்ரவேல் மக்களுக்கு அல்லாஹ் பல விட்டுக்கொடுப்புகளைச் செய்தான். அதற்கு பகரமாக நன்றியுடன் இருக்காமல் அகந்தை கொண்டவர்களாக அவர்கள் மாறி தாங்களே இறைவனின் நேரடி வாரிசுகள் எனக் கூறிக் கொண்டனர். இறுதியில் மிக சொற்பமானவர்களே மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் போதனைகளை பின்பற்ற தொடங்கினர்.

## யஃஜூஜ், மஃஜூஜ்

மத்திய ஆசியாவில் அரசர் துல்கர்னைன் என்பவரின் ஆட்சியின்போது பூமியில் குழப்பம் விளைவித்து, மக்களுக்கு பல இன்னல்களை இழைத்த கொடிய வனவாசிக் கூட்டத்தினரே யஃஜூஜ், மஃஜூஜ் ஆவர். தனது மக்களை யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தின் அக்கிரமத்திலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் அரசர் துல்கர்னைன் இரும்புச் சுவரை எழுப்பினார். இறுதி நாள் நெருங்கும்போது யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் வெளியாகி பூமி முழுவதும் அக்கிரமம் விளைவிப்பர் என அல்குர்ஆன் கூறுகின்றது. இது மறுமை நாளின் அத்தாட்சிகளில் ஒன்றாகவும் விளங்குகிறது.

''யஃஜூஜ், மஃஜூஜ் (கூட்டத்தார்)க்கு வழி திறக்கப்படும்போது, அவர்கள் ஒவ்வொரு மேட்டிலிருந்தும் இறங்கிப் பரவுவார்கள்.'' (21:96)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com

# அதிசய பாலைவனம் சஹாரா



பூமியின் ஒவ்வொரு பகுதியும் வித்தியாசமான அமைப்பில் வித்தியாசமான காலநிலையுடன் இருப்பது பூமிக்கே உரிய தனித்துவமாகும். ஒரு பக்கத்தில் கடுமையான குளிர்சார் ஐஸ் பிரதேசங்கள், இன்னொரு பக்கத்தில் அடர்ந்த பசுமையான காடுகள், அழகான கடல், ஆறு, குளங்களைக் கொண்ட நீர் நிலைகள், மறுபுறம் பயங்கரமான பாலை நிலங்கள் என பல தரப்பட்ட அமைப்பில் காணப்படுகின்றது. உண்மையில் இவை அனைத்துக்கும் இடையில் ஒரு சங்கிலிப் பிணைப்பு இருக்கின்றது என்பதுதான் இன்றைய நவீன புவியியல் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு. இத்தொடரில் நாம் சஹாரா பாலைவனம் பற்றி சற்று நோக்குவோம்.

**அறிமுகம்**

சஹாரா பாலைவனம் ஆபிரிக்காவின் வடபகுதியில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய சுடு பாலைவனமாகும். கொளுத்தும் வெயில், முடிவில்லாத மணல்வெளி, உயர்ந்து நிற்கும் மணற் குன்றுகள், ஆங்காங்கே சொற்ப தாவரங்கள்… இப்படியான இலக்கணங்களுடன் விளங்கும் சஹாரா பாலைவனமும் ஓர் இயற்கை அதிசயம்தான். வடக்கு ஆபிரிக்காவில் உள்ள சஹாரா பாலைவனம், 94 லட்சம் சதுர கிலோ மீற்றர் பரப்பைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சஹாரா என்ற அரபுச் சொல்லுக்கு மிகப் பெரிய பாலைவனம் என்று பொருள். இது 'அஸ்சஹ்ராஉ' என்ற அரபுச் சொல்லிலிருந்து வந்ததாகும். பாலை நிலங்களில் சஹாரா உலகின் மூன்றாவது பெரிய நிலமாக அடையாளப் படுத்தப்படுகின்றது. அன்டார்டிக் மற்றும் ஆர்க்டிக் பனிப் பாலை நிலங்கள் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கின்றன. இவை குளிர் பாலைவனங்களாகும்.

**அமைவிடம்**

சஹாரா பாலைவனம் ஆபிரிக்கா கண்டத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இதற்கு மேற்கில் அட்லாண்டிக் கடலும் வடக்கு திசையில் அட்லஸ் மலை மற்றும் மத்திய தரைக் கடல் பகுதிகளும் கிழக்கில் செங்கடலும் தெற்கில் சூடான் பகுதிகளும் எல்லைகளாக உள்ளன. இப்பாலைவனம் அல்ஜீரியா, சாட், எகிப்து, எரித்ரியா, லிபியா, மாலி, மெரிடேனியா, மொரோக்கோ, நைகர், சூடான், டியுனிஷியா, மேற்கு சஹாரா ஆகிய பன்னிரெண்டு நாடுகள் வரை பரந்து விரிந்துள்ளது.

**புவியியல் அமைப்பு**

சஹாராவின் புவியியல் அமைப்பு வித்தியாசமானது. இதனை ஆய்வு செய்ய இலகுவாக புவியியல் ஆய்வாளர்கள் மேற்கு சஹாரா, மத்திய அஹக்கார் மலை, திபெஸ்தி மலை, ஜார் மலை, டெனிரி பாலைவனம், லிபியன் பாலைவனம் என்று ஆறு பகுதிகளாகப் பிரித்துள்ளனர். சஹாரா பாலைவனம் என்பது மணற்குன்று, மணற் கடல், கல்பீடபூமி, காய்ந்த பள்ளத்தாக்கு,



AHARAM அகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உப்பு ப்ளாட், மலை, ஓடை, பாலைவனச் சோலை மற்றும் இரண்டு நதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. திபெஸ்தி மலையில் அமைந்துள்ள ஏமி கூஸி (Emi koussi) தான் சஹாராவின் மிக உயரமான சிகரமாகும். இதன் உயரம் 3415 மீற்றர் ஆகும். வடக்கு சாட் பகுதியில் அமைந்துள்ள இம்மலை ஒரு கவச எரிமலை (Shield Volcano) ஆகும்.

உலகிலேயே அதி வெப்பம் மிகுந்த பகுதியாக சஹாராவை நாம் நினைத்தாலும் அது முற்று முழுதாக வரண்ட பகுதியல்ல என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சஹாரா பாலைவனத்தில் மிக உயரிய மலைகளும் உள்ளன. அவற்றில் சில மலைகளில் கோடை காலங்களிலும் பனி படர்ந்திருக்கும். சஹாராவில் பல ஆறுகள் ஓடுகின்றன. ஆனால், அவை குறிப்பிட்ட காலங்கள் மட்டுமே பாய்வனவாகும். நைகர் நதியும் நைல் நதியும் சஹாராவில் பாயும் வற்றாத இரு நதிகளாகும். சில இடங்களில் நிலத்தடி ஆறுகளும் ஓடுகின்றன. அவை ஊற்றுக்களாக மேற்புறம் வரும் இடங்களில் பாலைவனச் சோலைகள் தோன்றுகின்றன. சஹாராவில் பகலில் எந்தளவு வெப்பம் இருக்குமோ அதற்கு நிகரான கடுமையான குளிர் காற்று இரவு நேரங்களில் வீசிக் கொண்டிருக்கும். சஹாராவில் வீசும் மணற் புயல் காற்றுதான் மிகவும் அபாயகரமானது.

தொடர்ந்து சஹாராவின் பருவநிலை மாற்றங்களை கவனித்துவரும் ஆய்வாளர்கள் கடந்த சில நூறு ஆண்டுகளாக சஹாரா வித்தியாசமான பருவநிலை மாற்றங்களைச் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர். மட்டுமல்லாமல் இப்போது, வரண்ட பகுதியாக இருக்கும் சஹாரா, இன்னும் 15,000 ஆண்டுகள் கழித்து மீண்டும் பசுமையாக மாறும் என்றும் தெரிவிக்கின்றனர். ஏனெனில், இதற்கு இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பும் சஹாரா பசுமையான இடமாக இருந்துள்ளமைக்கான சில புவியியல் ஆதாரங்கள் இருக்கின்றனவாம். சஹாராவில் குளங்களும் நதிகளும் ஏரிகளும் இருந்துள்ளமைக்கான அடையாளங்களையும் அவர்கள் கண்டறிந்துள்ளனர். எனவே, மீண்டும் இது பசுமையாக மாறுவதில் ஆச்சரியமொன்றும் இல்லை என்கின்றனர் ஆய்வாளர்கள். கீழே உள்ள நபிமொழியை ஒரு முறை படியுங்கள்.

''அரேபியா மீண்டும் மேய்ச்சல் நிலங்களாகவும் ஆறுகள் ஓடக்கூடியதாகவும் ஆகாத வரை இறுதிநாள் (உலக முடிவு நாள்) ஏற்படாது'' (முஸ்லிம்) என்று அப்போதே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய வாக்கு நிகழாமல் இருக்குமா என்ன? இந்த ஹதீஸ் அரேபியாவை மட்டும் குறிக்கிறதா? அல்லது அரேபியா போன்றிருக்கும் ஏனைய பாலைவனங்களும் இதில் உள்ளடங்குமா என்பதை அல்லாஹ்வே மிக்க அறிந்தவன்.

## உயிரினங்கள்



பூமியின் மிக வரண்ட, வெப்ப பிரதேசமாக சஹாரா இருந்த போதிலும் அதற்கும் ஈடுகொடுத்து வாழக் கூடிய பல உயிரினங்களை அல்லாஹ் அங்கு படைத்துள்ளான். சஹாராவில் 1200 வகையான தாவரங்களும் சுமார் 70 வகையான மிருகங்களும் வாழ்கின்றன. தாவரங்களைப் பொறுத்தவரை அவை முட்செடிகளாகவும் கடினத்தன்மை கொண்டனவாகவும் உள்ளே தண்ணீரையும் கொண்டிருக்கும். இத்தாவரங்கள் அதிக உயரம் வளர்வதுமில்லை ஆயுளும் குறைவு.


பாலைவனத்தின் சில பகுதிகளில் மனிதர்களும் வாழ்கின்றனர். அவர்களை 'பதவி நாடோடி' என்று அழைப்பர். ஒட்டகமும் ஆடும் இங்கு பொதுவான வீட்டு விலங்குகளாகும். நரி, சிறுத்தைப் புலி, மணல் விரியன், தேள், கொமோடோ பல்லி, காட்டு நாய், தீக்கோழி, மறிமான் (Antelope) ஆகிய விலங்குகளும் காணப்படுகின்றன. மேலும் தோர்க்சு, ரிம், தாமா எனப்படும் சிறுமான்களும் காணப்படுகின்றன. அல்சீரியா, தோகா, நைகர், மாலி முதலான பகுதிகளில் சஹாரா சிறுத்தைகள் காணப்படுகின்றன. சிறு அளவிலான ஆபிரிக்கக் காட்டு நாய்களும் நரிகளும் உள்ளன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிலந்திகளும் எறும்புகளும் இருக்கின்றன. இங்கு வெள்ளி எறும்புகள் எனும் ஒருவகை எறும்பினங்கள் உள்ளன. இவை மட்டுமன்றி கழுகுகள், இன்னும் பல பறவைகளும் வாழ்கின்றன. இது பூமிக்கடியில் துளைகளில் வசிக்கும். ஒரு மணிநேரத்திற்கு மேல் இவை வெளியில் திரிந்தால் இறந்துவிடும். இவை வெப்பத்தினால் இறக்கும் உயிரினங்களை உணவாக உட்கொண்டு வாழ்கின்றன. இங்குள்ள தாவரங்கள் உட்பட விலங்குகள், பறவைகள், பூச்சிகள் அனைத்தையும் இப்பகுதியின் காலநிலைக்கும் தட்ப வெப்ப நிலைகளுக்கும் ஏற்ற விதத்தில் வாழும் ஆற்றலுடன் அல்லாஹ் படைத்துள்ளான். இவ்வுயிரினங்கள் யாவும் அதிக காலம் நீர் அருந்தாமல் வாழும் ஆற்றல் பெற்றவையாகும்.

**வளங்களும் உரங்களும்**



சஹாராவில் 20 இலட்சம் மக்கள் மட்டுமே வாழ்கின்றனர். இதில் பெரும்பாலானோர் நாடோடிகள். இங்குள்ள முக்கிய பழங்குடி இனத்தின் பெயர் பெர்பெர் (Berber) ஆகும். முக்கிய மொழி அரபி. இங்கு பெரும் அளவில் இரும்பு தாதுக்கள் கிடைக்கின்றன. சில இடங்களில் யுரேனியமும் அல்ஜீரியாவில் எண்ணெய்யும் மேற்கு சஹாராவில் பொஸ்பேட்டு தாதுக்களும் அதிக அளவில் கிடைக்கின்றன. இவற்றில் அதிகமானவை சிறந்த உரங்களாகும். தாவரங்களின் வளர்ச்சிக்கு சிறந்த பசளைகளாக விளங்கினாலும் இப்பகுதியின் வெப்பம் அதற்கு இடம்கொடுப்பதில்லை. இப்பாலைவனத்தின் மெரிடேனியா பகுதியில் ரிச்சாட் (Richard) என்ற விசித்திர நில அமைப்பு காணப்படுகிறது. எருதின் கண் போல் காணப்படும் இதை சஹாராவின் கண் என்றும் அழைப்பர். 50 கி.மீ. விட்டத்தில் அமைந்துள்ள வட்ட வடிவ, வரி வரியாக அரித்தெடுக்கப்பட்ட இயற்கையான பாறை அமைப்பு இது.

**அமேசன் காட்டுக்கு உரமளிக்கும் சஹாரா**

கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியதுபோல இப்புவியின் ஒவ்வொரு பகுதிக்கும் இடையில் ஒரு சங்கிலிப் பிணைப்பு காணப்படுகின்றது. ஒன்று இன்னொன்றில் தங்கி வாழ்கின்றது. மிக வரண்ட பகுதியான சஹாரா பாலைவனத்திற்கும் மிக செழிப்பான பிரேஸிலின் அமேசன் மழைக் காடுகளுக்கும் இடையிலான அற்புதமான, ஆச்சரியமான தொடர்பை புதிய ஆய்வொன்று விளக்கியுள்ளது. அவ்வாய்வு சுட்டிக் காட்டுவதாவது:

சஹாரா பாலைவனத்தில் இருக்கும் ஊட்டச்சத்துக் கொண்ட பல்லாயிரக்கணக்கான தொன் புழுதிகள் மணிக்கு 20 மைல் வேகத்தில் வீசும் புயல் காற்று மூலம் அள்ளிக்கொண்டு அட்லாண்டிக் சமுத்திரத்தையும் கடந்து சென்று அமேசன் மழைக்காடுகளில் கொட்டப்படுகின்றன. இந்த புழுதி அதிக பொஸ்பரஸ் கொண்டதாக இருப்பதால் அது சிறந்த இயற்கை உரமாக செயற்பட்டு அமேசன் வனத்தை பாதுகாக்கின்றது. அமேசன் காடுகளுக்கு ஆண்டுதோறும் 22,000 தொன்களுக்கும் அதிகமான பொஸ்பரஸ் மணல்கள் சஹாரா பாலைவனத்தில் இருந்து கிடைப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு முடிவு ஜோக்ரபிகல் ரிசேச் லெட்டர்ஸ் சஞ்சிகையில் வெளியாகியுள்ளது.

சுப்ஹானல்லாஹ்! அல்லாஹ்வின் படைப்பாற்றலின் சமநிலைத்தன்மையைப் பார்த்தீர்களா? அல்லாஹ்வின் படைப்புகளில் எந்தவொன்றும் வீணுக்காகப் படைக்கப்படவில்லை என்பதற்கு இதுவும் ஒரு சிறந்த சான்று. வரண்ட பாலைவனத்தின் மூலம் எத்தனையோ ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள ஒரு மழைக்காடு உயிர் வாழ்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர்

எம்.ஏ. ரஹ்மான்

ஒரு நாள் ஆயிஷா நாயகியார் பெருமானாரைப் பார்த்து, ''உஹத் யுத்தத்தைப் பார்க்கிலும் மிகப் பயங்கரம் ஒன்றினை உங்கள் வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

ஆனால், பெருமானாருடைய வாழ்க்கையிலே அவர் குறிப்பிடும் அந்தப் பயங்கர நிகழ்ச்சி என்ன? பிறப்பதற்கிடையிலே பெருமானார் தமது தந்தையை இழந்தார்கள். குழந்தைப் பருவத்திலேயே தமது தாயாரையும் இழந்தார்கள். எனவே, அவர்கள் இந்த உலகத்திலே ஏழையாக விடப்பட்டார்கள். ஆனால், இவை ஒன்றையும் அவர்கள் தமது வாழ்க்கையின் அதிதுன்பம் என்று குறிப்பிட்டதில்லை. பெருமானார் இஸ்லாத்தைப் போதித்த ஆரம்ப நாட்களிலே குறைஷிக் குலத் தலைவர்கள் அவர்களைக் கடுமையாக எதிர்த்தார்கள். அவர்களில் சிலர் அபூதாலிப் பெருமானாருக்கு அளித்து வரும் பாதுகாப்பினை வாபஸ் பெற வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அபூதாலிப் இந்தக் கோரிக்கைக்கு இணங்கலாம் என்ற ஒரு நிலைமை உருவாகியது. அவ்வாறு நடந்தால் பெருமானார் எதிரிகளின் தயவு தாட்சண்யமற்ற கோப வெறிக்குள் அகப்பட்டிருப்பார்கள். இதனையும் பெருமானார் அதிபயங்கர அனுபவமாகக் குறிப்பிடவில்லை. பின்னர், அவர்களைப் பட்டினி போட்டுக் கொல்ல முயற்சி எடுக்கப்பட்டது. மலையுச்சியிலிருந்து அவர்கள் மீது பாறைகள் உருட்டி விடப்பட்டன. அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த சமயம் அவர்களுடைய கூடாரத்திற்கு தீ வைக்கப்பட்டது. அவர்களுடைய உணவிலே நஞ்சு இடப்பட்டது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்கள் மயிரிழையிலேயே தப்பினார்கள். ஆனால், இவற்றை எல்லாம் கூட அவர்கள் தமது பயங்கர அனுபவமாகக் கருதவில்லை.



இவை எல்லாவற்றிற்கும் மாறாக, ஆயிஷா நாயகியின் கேள்விக்குப் பின்வருமாறு பதிலளித்தார்கள்:

''என் போதனைகளை ஆரம்பத்தில் மக்காவாசிகள் அதிதீவிரமாக எதிர்த்தார்கள். எனவே, தாயிபிலே என்னுடைய போதனைகளை நடத்த தாயிபின் தலைவனிடம் அனுமதி கேட்டிருந்தேன். அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், அந்தத் தலைவன் எனக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதற்காக இரகசிய ஏற்பாடு செய்திருந்தான். நான் போதனையைத் துவங்கியதும் அவர்கள் என்னைத் தாக்கினார்கள். என் உடல் எல்லாம் காயங்கள் ஏற்பட்டன. நான் மூர்ச்சையாகி விழுந்தேன். தாயிபிலிருந்து சற்று தூரத்திற்கு என் தோழர் ஒருவர் என்னைத் தமது தோள்களிலே சுமந்து சென்றார். அங்கே ஒரு மரத்தின் கீழ் என்னைப் படுக்க வைத்தார். கிராமத்திற்குள் சென்று தண்ணீர் கேட்டார். எல்லோரும் தண்ணீர் கொடுக்க மறுத்தார்கள். அவர் ஏமாற்றத்துடன் திரும்பினார்.

அப்பொழுது நான் மூர்ச்சை தெளிந்தேன். ஆகாயத்தை நோக்கி எனது கைகளை உயர்த்திப் பிரார்த்தித்தேன். 'எல்லாம் வல்ல அல்லாஹ் இது உன்னுடைய தூது. மக்களுக்கு இதனை அறிவிக்கும்படி நீயே ஆணை பிறப்பித்தாய். ஆனால், மக்கள் எனக்குச் செவிசாய்க்கின்றார்களில்லை. இதற்கு என்னிடமுள்ள சில குறைபாடுகளும் பலவீனங்களும் காரணமாக இருக்கலாம். காருண்ய அல்லாஹ்! எனக்கு நெஞ்சிலே உரத்தையும் குரலிலே உறுதியையும் தந்தருள்வாயாக...'

''அதேநேரத்தில், தாயிபை பாழ்வெளியாக மாற்றுவதற்கு என்னுடைய சமிக்ஞைக்காகக் காத்திருப்பதுபோல ஜிப்ரீல் வானத்திலே தோன்றியதைக் கண்டேன். நான் பயத்துடன் அலறினேன். 'இல்லை இல்லை, அது நடக்கக் கூடாது. மனித குலத்திற்கு ஓர் அருட்கொடையாகவே இறைவன் என்னை அனுப்பினான். அவர்களுக்குத் துன்பம் நேர்வதை நான் விரும்பவில்லை. அவர்கள் என்னுடைய தூதினை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவர்களுடைய சந்ததியினர் ஏற்றுக் கொள்ளலாமல்லவா?''

''தாயிபிற்கு ஏற்பட இருந்த அந்தத் துன்பமே என்னுடைய வாழ்க்கையிலே அதி பயங்கரத் துயர் அனுபவமாகும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உடலியல், உயிரியல் மருத்துவம்

1. மஞ்சட் காமாலை நோயினால் பாதிப்புறும் உறுப்பு - கல்லீரல்
2. எலி கடிப்பதால் உண்டாகும் நோய் - பிளேக்
3. மனித உமிழ்நீரிலுள்ள நொதியங்கள் - தய்லின், அமிலேசு
4. அறுவை சிகிச்சையின்போது உடல் விறைப்பதற்கு பயன்படுத்துவது - ஈதர்
5. மலேரியா நோயை மனிதனுக்கு ஏற்படுத்தக் கூடிய பெண் நுளம்பு - அனோபிலிஸ்
6. மிக வலிமையான தசைப் பகுதி - நாக்கு
7. மிகப் பெரிய தசை - இதயத் தசை
8. மூட்டுக்களின் எண்ணிக்கை - 7200
9. உடலில் மிகப் பெரிய இணைப்பு - முழங்கால்
10. மனித மூளையின் சிந்தனையின் நேரம் - மணிக்கு 270 Km

எப்.எம். பர்ஹான்
சிராஜ் அ.க.
ஓட்டமாவடி



# சிந்தித்து செயற்படு; சிந்தித்துப் பேசு

- நீ எண்ணுவதைக் கூறு. ஆனால், கூறுவதை சற்று சிந்தித்துக் கூறு. பிரச்சினையை விட அதிகமாய் சில இடங்களில் பேச்சிருக்கும்.
- அதிகம் பேசுபவனே அதிகம் பிழைவிடுகிறான். நன்றாக பேசத் தெரியாதவர்களே அதிகம் பேசுகிறார்கள். பேசாதவர்கள் தவறு விடுவதில்லை.
- ஒரு மனிதன் யார் என்று அவன் பேச்சு காட்டிவிடுகிறது. மிக அதிகமாக பேசுபவர்கள் 'தைரியசாலிகள்' அல்லர். வார்த்தை வேண்டாம், செயலே தேவை.
- எவ்விதம் மௌனமாயிருப்பதென்று தெரியாதவர்கள் எவ்விதம் பேசுவதென்று அறிய மாட்டார்கள். அமைதியாக வாழ விரும்புபவன் மிகச் சிறந்தவற்றை கேட்க வேண்டும்; பேச வேண்டும்; பார்க்க வேண்டும்.
- அதிகம் பேசுபவர்களே மிகக் குறைவாக வேலை செய்வார்கள். யாரிடம் பேசுகிறோம், என்ன பேசுகிறோம் என்பதில் எச்சரிக்கையாயிரு.

நிஸாதா ஜமீன்
பு/இஸ்லாஹிய்யா பெ.க.அ.
புத்தளம்

# இலங்கையின் தொழிற்சாலைகளும் அதன் அமைவிடங்களும்

- பிறீமா மா தொழிற்சாலை: திருகோணமலை
- கட்டிப்பால் தொழிற்சாலை: பொலன்னறுவை
- பால் பதனிடல் தொழிற்சாலை: அம்பேவல
- பால் பவுடர் தொழிற்சாலை: வெலிசரை
- ஒட்டுப் பலகை தொழிற்சாலை: ஜின்தோட்ட
- இரும்புருக்கு தொழிற்சாலை: ஒருவெல
- டயர் டியூப் தொழிற்சாலை: களனி
- சீமெந்து தொழிற்சாலை: புத்தளம், காலி, காங்கேசன்துறை
- புடவை தொழிற்சாலை: துல்கிரிய, பூகொட, வெயங்கொட
- காகித தொழிற்சாலை: வாழைச்சேனை, எம்பிலிபிட்டிய
- சீனித் தொழிற்சாலை: கந்தளாய், ஹிங்குராண, பெலவத்த
- கனிப்பொருள் தொழிற்சாலை: புல்மோட்டை
- இறப்பர் தொழிற்சாலை: மாவனல்லை
- எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை: சபுகஸ்கந்த
- மட்பாண்ட தொழிற்சாலை: ரத்தோட்ட, பிலியந்தல
- கண்ணாடி தொழிற்சாலை: நாத்தாண்டிய
- உலோக தொழிற்சாலை: யக்கல



எம்.ஆர்.எம். அஸாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நினைவில் கொள்வோம்

- திருக்குறல் என்ற நூலை இயற்றியவர்: திருவள்ளுவர்
- ஆத்திசூடி என்ற நூலை இயற்றியவர்: ஔவையார்
- பகவத் கீதை என்ற நூலை இயற்றியவர்: வேதவியாசர்
- மகாபாரதம நூலை இயற்றியவர்: வேதவியாசர்
- இராமாயணம் நூலை இயற்றியவர்: வான்மீகி
- கம்பராமாயணம் நூலை இயற்றியவர்: கம்பர்
- சூலவம்சம் நூலை இயற்றியவர்: தர்ம கீர்த்தி தேரர்
- குடியரசு நூலை இயற்றியவர்: பிளாட்டோ
- தேசங்களின் செல்வம் நூலை இயற்றியவர்: அடம் ஸ்மித்


எம்.என்.எப். நதா
கிரி/அறக்கியால மு.வி.


# விகடத் துணுக்கு நமது மந்திரிகள்

- மூளை - பிரதம மந்திரி
- முள்ளந்தண்டு - இணை அமைச்சர்
- நரம்பு மண்டலம் - ஊடகத்துறை அமைச்சர்
- தலை - கல்வி அமைச்சர்
- தோல் - மனிதவள மேம்பாட்டமைச்சர்
- எலும்பு - பாதுகாப்பு அமைச்சர்
- கண் - வெளியுறவுத்துறை அமைச்சர்
- காது - தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர்
- மூக்கு - சுகாதாரத்துறை அமைச்சர்
- பல் - கிராமியத்துறை அமைச்சர்
- இதயம் - உள்நாட்டு விவகாரத்துறை அமைச்சர்
- கை - தொழில்துறை அமைச்சர்
- வயிறு - உணவுத்துறை அமைச்சர்
- கால் - போக்குவரத்து அமைச்சர்


இஸட் எம். அப்ரி
கிரி/அறக்கியால மு.வி.


# அறிவு செல்வத்தை விடச் சிறந்ததா?

1. அறிவு செல்வத்தை விடச்சிறந்தது. ஏனெனில், அறிவு இறைத்தூதர்களின் வாரிசுகளுக்காக வைக்கப்படுவது. செல்வம் பிர்அவ்னிடம் இருந்து பெறப்படுவது.
2. அறிவு செல்வத்தை விடச்சிறந்தது. ஏனெனில், நீங்கள் செல்வத்தை காக்கின்றீர்கள். அறிவு உங்களை காக்கிறது.
3. அறிவு செல்வத்தை விட சிறந்தது. ஏனெனில், செல்வந்தருக்குப் பல பகைவர்கள் இருப்பர். அறிஞர் பல நண்பர்களைப் பெற்றிருப்பர்.
4. அறிவு செல்வத்தை விடச் சிறந்தது. ஏனெனில், அறிவு வழங்கப் பட வளர்கிறது. செல்வம் கொடுக்கப்பட குறைகிறது.
5. அறிவு செல்வத்தை விடச் சிறந்தது. ஏனெனில், செல்வத்தைப் போல் அறிவை திருட முடியாது.
6. அறிவு செல்வத்தை விடச் சிறந்தது. ஏனெனில், அறிவு காலத்தால் அழியாது. செல்வம் அழியும்.
7. அறிவு செல்வத்தை விடச் சிறந்தது. ஏனெனில், அறிவால் மனம் ஒளிர்கிறது. செல்வத்தால் அறிவு கெடுகிறது.


ஹிமாயா பின்த் அஹ்மத்
ஸஹ்ரா வளாகம்
ஓட்டமாவடி


today is a news paper
tomorrow is waste paper
life is a test paper
don't copy in front paper
friendship is a best paper
so don't use it
like a tissue paper





M.N.F. Nifla Nazar
Al Hikma College
Colombo-12


# பாடசாலை

கல்வியென்னும் அமுதை
அள்ளி வழங்கும்
இணையில்லா
பள்ளிக்கூடமே
நாட்டுக்கு தொண்டு
புரிகின்ற
சேவகர்களை
உருவாக்குகின்ற
கலைக்கூடமே
பாடசாலை!





எம்.எம்.எப். முபீதா
அந்நூர் மத்திய கல்லூரி
பாணகமுவ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயிரூட்டும் வரிகள்

- ❖ மனிதனுடைய ஒவ்வொரு மூச்சும் மண்ணறையை நோக்கி எடுத்து வைக்கும் எட்டு.
- ❖ பொருளில் புதியது நல்லது; நட்பில் பழையது நல்லது.
- ❖ ஒவ்வொரு பொருளுக்கும் ஸகாத் உண்டு. அறிவின் ஸகாத் மடையர்களின் பேச்சைக் கேட்டு பொறுமையாய் இருப்பது.
- ❖ அறிவுள்ளவனின் நாவு அவன் இதயத்தில் இருக்கும். அறிவற்றவனின் இதயம் அவன் வாயில் இருக்கும்.
- ❖ பேச்சு மருந்துக்கு நிகரானது. அதை அளவோடு பயன்படுத்தினால் அது பயன் தரும். அளவை மீறினால் ஆபத்து வரும்.
- ❖ விரும்பியது அமையாவிட்டால் அமைந்ததை விரும்பு.
- ❖ சத்தியத்தை உணர்ந்தால்தான் தியாகங்கள் இனிதாய் இருக்கும்.
- ❖ வாழும்போது மற்றவர்களையும் நினை; வணங்கும்போது இறைவனை மாத்திரமே நினை.

**ஹிமாயா அஹ்மத்**
**ஸஹ்ரா வளாகம்**
**ஓட்டமாவடி**

# கோபத்தை குறைக்க சில வழிகள்



- ❍ கோபத்தின் முக்கிய காரணியான வெறுப்பை கைவிடுங்கள்.
- ❍ கோபத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை தவிர்த்திருங்கள்.
- ❍ அவசரம் ஒருபோதும் வேண்டாம்.
- ❍ நேரம், மேம்பாடு மற்றும் சுய கட்டுப்பாட்டை கடைப்பிடியுங்கள்.
- ❍ செய்யும் வேலைகளை நேசத்துடனும் நேர்மையுடனும் குழப்பம் இல்லாமலும் செய்யுங்கள்.
- ❍ கோபம் வருகிற சூழ்நிலைகளில் வாயை பொத்திக் கொள்ளுங்கள்.
- ❍ ஆழமான பெருமூச்சு விடுங்கள்.
- ❍ எவ்வளவு கோபம் ஏற்படுகின்றதோ அதைப் பொறுத்து ஒன்று முதல் நூறு வரையான எண்களை எண்ணுங்கள்.
- ❍ சுறுசுறுப்பான நடைப்பயிற்சி செல்லுங்கள்.
- ❍ கோபம் வருகின்றது என்று தெரிந்ததும் ஒரு குவளை தண்ணீர் குடியுங்கள்.
- ❍ முகத்தை கழுவுங்கள் அல்லது சுகமான குளியல் போடுங்கள்.
- ❍ குர்ஆன் ஓதுங்கள்.
- ❍ எந்த விஷயம் கோபத்தை ஏற்படுத்துமோ அதைப் பற்றி விவாதிப்பதை விட்டுவிட்டு வேறு விஷயத்தின் பக்கம் திரும்புங்கள்.
- ❍ குட்டித் தூக்கம் போடுங்கள்.

**எம்.என். பாதிமா மனால்**
**அனு/பள்ளுவெவ மு.ம.வி.**
**கெகிறாவ**

# ஓர் அழகிய கவசம்

- ❍ வெட்கம் என்பது ஒரு சங்கைமிக்க பண்பாகும். அது வெட்கமுடையவர்களை நல்லவற்றை கடைப்பிடிக்குமாறும். தீயவற்றை விட்டுவிடுமாறும் அழைக்கின்றது.
- ❍ மேலும், அது இழிவான செயல்களை விட்டும் உள்ளத்தை பாதுகாக்கின்ற ஒரு சுய கட்டுப்பாடு.
- ❍ ஒரு மனிதனுடைய வெட்கம் பலமானால்...
  - ❖ அவனுடைய கண்ணியம் அதிகரிக்கும்;
  - ❖ அவனது இழிவான செயல்கள் குறையும்.
- ❍ அதேபோல் வெட்கம் பலவீனமடைந்தால்...
  - ❖ அவனுடைய இழிவான செயல்கள் அதிகரிக்கும்;
  - ❖ அவனுடைய கண்ணியமான செயல்கள் குறையும்.
- ❍ யாருக்கு வெட்கம் இல்லையோ அவனை அவனுடைய நண்பர்கள் வெறுப்பார்கள்.
- ❍ வெட்கமென்பது ஒரு பரிபூரண ஆடை; ஓர் உறுதியான திரை. ஒரு பேணுதலான நண்பன் மார்க்கத்தினுடைய உற்ற தோழனாகும்.
- ❍ வெட்கம் ஒரு முஃமினுடைய அலங்காரமாகும். ஏனென்றால், அது ஈமானின் ஒரு கிளையாகும்.

**அஸ்லம் முஹமட் புஹாரி**
**சிறாஜிய்யா அ.க.**
**ஓட்டமாவடி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

ஏ.ஆர்.எம். ஜிப்ரி
அதிபர்
களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. 'இக்ரஃ' என்று ஆரம்பமாகும் அல்குர்ஆனின் முதல் வசனங்கள் அல்குர்ஆனில் எத்தனையாவது ஸூராவில் உள்ளன?
2. புனித ஹஜ் மூவரின் தியாகங்களை வலியுறுத்துகின்றது. அம்மூவரினதும் பெயர்களைக் கூறுக.
3. மக்கா வெற்றி ஹிஜ்ரி 8 இல் எந்த மாதத்தில் நடந்தேறியது?
4. நயவஞ்சகத்தைக் குறிக்கும் அரபுச் சொல் எது?
5. இஹ்லாஸ் என்பதன் கருத்து என்ன?
6. அத்தாரிக் அல் கபீர் கிரந்தத்தை எழுதியவர் யார்?
7. 'நிஸா' என்ற அரபுச் சொல்லுக்குரிய கருத்து யாது?
8. ''அவருக்கு இரும்பை மிருதுவாக்கிக் கொடுத்தோம். நிறைவான கவசங்களை உற்பத்தி செய்வீராக! அவற்றில் வளையங்களை ஒழுங்குபடுத்தி அமைப்பீராக!'' என்ற அல்குர்ஆன் வசனத்தின் பிரகாரம் இரும்பை உருக்கித் தொழில் செய்ததாகக் கூறப்படும் நபியவர்களின் பெயர் என்ன?
9. தச்சுத் தொழிலில் அதிகளவு ஈடுபாடு காட்டிய நபியவர்கள் யார்?
10. அபூபக்ர் (ரழியல்லாஹூ அன்ஹூ) அவர்கள் காலமானதும் உமர் (ரழியல்லாஹூ அன்ஹூ) அவர்களின் ஆட்சி ஆரம்பிக்கப்பட்டதும் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டில் ஆகும்?
11. குலபாஉர் ராஷிதூன்களின் ஆட்சிக் காலம் முடிவடைந்ததும் உமையாக்களின் ஆட்சி ஆரம்பமானது. உமைய்யா வம்சம் ஆட்சியின் முதலாவது கலீபா முஆவியா (ரழியல்லாஹூ அன்ஹூ) அவர்கள் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டில் கலீபாவாகப் பதவியேற்றார்கள்?
12. நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றபோது நபியவர்கள் தங்குவதற்காகவும் அவ்விடத்திலேயே தொழுது கொள்வதற்காகவும் குபா என்ற இடத்தில் கட்டப்பட்ட பள்ளிவாசல் இஸ்லாத்தின் முதலாவது மஸ்ஜித் ஆகும். இதனைக் கட்டுவதற்காகக் கற்களைக் கொண்டு வந்து சேகரித்துப் பணிகளைச் செய்து முடித்த நபித்தோழரின் பெயர் என்ன?
13. ஹூதைபிய்யா உடன்படிக்கை எழுதி முடிக்கப்பட முன்பு ஸஹாபி ஒருவர் சங்கிலியால் கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் முஸ்லிம்கள் இருந்த பகுதிக்கு வந்தார். அந்த ஸஹாபியின் தந்தை காபிர்கள் தரப்பின் வக்கீலாவார். உடனே மகனை அடித்து மீண்டும் மக்காவுக்குச் செல்ல வைத்தார். நபியவர்கள் அந்த ஸஹாபியைப் பொறுமையாக இருக்கும்படி கூறினார்கள். பின்னர் அவர் அபூபசீர் (ரழியல்லாஹூ அன்ஹூ) அவர்கள் மறைந்திருந்த இடத்தையடைந்து அவருடன் வசித்தார். அந்த ஸஹாபியின் பெயர் என்ன?
14. நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின்போது அன்னாருடன் இருந்த பிராட்டியார் யார்?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. ஐக்கிய அமெரிக்காவில் வாழ்ந்த புகழ் பெற்ற இலங்கையின் விஞ்ஞானி நாஸா நிறுவனத்தில் கடமையாற்றியவர். செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் பற்றிய ஆய்விலும் ஈடுபட்டிருந்தார். 1994 டிசம்பரில் காலமானார். அவர் யார்?
2. 26.04.1999 தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் இலட்சக்கணக்கான கணினிகள் இயங்காமல் போயின. அதேபோல் அன்றே இந்தியாவில் ஆயிரக்கணக்கிலும் இலங்கையில் நூற்றுக்கணக்கிலும் கணினிகள் இயங்காமல் போய்விட்டன. இவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது தாய்வானைச் சேர்ந்த மாணவன் ஒருவன் உருவாக்கிய கொம்பியூட்டர் வைரஸ் ஆகும். அந்த வைரஸின் பெயர் என்ன?
3. இரத்மலானை விமான நிலையம் உருவாக்கப்பட்டது எத்தனையாம் ஆண்டிலாகும்?
4. அசோகச் சக்கரவர்த்தி பௌத்த மதத்தைத் தழுவுவதற்குக் காரணமாக இருந்த போரின் பெயர் என்ன?
5. மாத்தறை நகருக்கு அருகில் கடலில் சேரும் ஆறு எது?






விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

# رتب الحروف, لِتعرفَ الكَلِمَةَ


| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| ج ع ا ش | ف ل ي ح ت | ع و ا ن ج | غ م ي ض |
|  |  |  |  |
| ف ا ر س ي | م ي ق ع | ش ا ي د ه | ح ا ل ق ي |
|  |  |  |  |
| ز ي ق ل ن | ض م ي ر | ى م ع أ | ت ي ي ر س ع |
|  |  |  |  |
| ا ر ت خ ت | س م ت ر ف | ا ن ب غ ض | ح م ت ي ت |
|  |  |  |  |
| ر ش أ ط | ش ا ط ع ن | ل ل ي ق | غ ي ل ت ش |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## صِل بَينَ جزئَي التَّعبير      صِل بَينَ التَّعبير والصورة المُناسِبَة

| | |
|---|---|
| درَّاجة | شراعي |
| سفينة | حاسبة |
| آلة | كهربائيّة |
| حَاسِب | أرضِيّة |
| كرة | نارِيّة |
| رائد | فضاء |
| مَركَب | أسنان |
| طبيب | آليّ |
| فرشاة | شمسيّة |
| آلة | تَصوير |
| غسّالة | فضاء |
| نظّارة | دِهان |




## أكتب أسماء عشرة أشياء تحت كلِّ صورة:

### في محل الملابس



١. ....................................
٢. ....................................
٣. ....................................
٤. ....................................
٥. ....................................
٦. ....................................
٧. ....................................
٨. ....................................
٩. ....................................
١٠. ....................................


### في محطة القطار



١. ....................................
٢. ....................................
٣. ....................................
٤. ....................................
٥. ....................................
٦. ....................................
٧. ....................................
٨. ....................................
٩. ....................................
١٠. ....................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ENGLISH WITH

Miss. Aysha Hassan



## *Assalamu alaikum friends!*

This time I thought of discussing with you all about a very serious issue. "Can media portray anything and everything without any morality?"

Nowadays both print media and the electronic media have got hold of people irrespective of their age. Young adults and children often fall prey to media programs especially in the social and electronic media.

Most of the TV programs telecast even mean and shameful aspects which our people watch without any sort of hesitation. Watching such programs over and over has made young minds to behave violently and sometimes they stoop so low that their entire family is put into shame.

Do you think we should blame the media for all of this?

Yes, media plays a key role in spoiling the young generation. But I think more than media we ourselves are to be blamed for all the disgusting things that are happening around us..

Allah has blessed us with eyes, ears and sense to choose what is right and what is wrong. Evil may be prevalent everywhere but we as Muslims should know how to avoid such evil.

Here are some tips for you all on how to use media tools effectively and efficiently

- ✓ Always seek your parents' assistance when you choose to watch a TV program
- ✓ If you are user of the social media, then be very cautious in selecting your virtual friends
- ✓ Always be among good people because, no matter how good you are influence of bad people will make you commit sins
- ✓ Develop the skill to choose avoid bad that are shown in media






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

"Hell lies hidden behind evil (worldly desires) and paradise is screened behind hard labor." Reporter: Hadhrat Abu Huraira (r)

## Here is something to *Laugh* a little bit



**Wife:** "In my dream, I saw you in a jewellery store and you bought me a diamond ring."

**Husband:** "I had the same dream and I saw your dad paying the bill."




## Mother

I asked form my God a flower
He gave me a flower garden
I asked from my God a tree
He gave me a jungle
I asked from my God love
But He gave a lovely person
She is my mother

**Rifka Imthiyas**
**Al- Muminath A.C**
**Akurana**

## Your Corner

# I AM SRI LANKA



Hello my dears, I am Sri Lanka. I am going to tell you about me.

I am situated in Indian Ocean and located just off the southern coast of India. I have often been considered the pearl of the Indian Ocean. My total land area is 65,610 sq km and I am astonishingly varied.

Sri Jayawardanapura Kotte is the capital city of me. Sinhala with over 13 million speakers and Tamil with 3 million speakers are the two official languages of me. English is spoken by approximately 10 percent of the population and widely used for education, science and commercial purpose. Buddhism, Hinduism, Islam and Christianity are the major four religions practiced in me.

I follow decimal currency system in rupees. I have growing economy as I have tourism industry, tea export, and apparel industry and rice production. Most of my cities are towns and are connected by the Railways and main roads.

And I am Sri Lanka

**M.M. Asjadh**
**Wanahapuwa, Deltota**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Proverbs

1. Experience is the best teacher
2. A little labour paves to better health
3. Faith will move mountains
4. Health is wealth
5. Art is long and life is short

**Ilma Kamaldeen 10A**
**Al-Hidhaya M.V**

# Importance of LEARNING ENGLISH

English is a most commonly spoken language in the world. It is the official language of 53 countries and also is spoken as the first language by around 400 million people around the world. Since English is spoken in so many different countries there are 1000s of schools around the world that offer programs in English. If you speak English, there are lots of opportunities for you to find schools and courses that will suit your academic needs. English is not only useful; it gives you a lot of satisfaction. Making progress feels great. You will enjoy learning English, if you remember that every hour you spend brings you closer to perfection.

*So, learning English is very important in your life..*

**M.R.F.Azmira 10 E**
**Zahira College Mawanella**

# Time

I am not meant for spare moments or free time.
I am not a check on your to-do list.
I do not fall under weekly, monthly or annually.
I can't be satisfied with your accumulated seconds and fleeting minutes.
I am meant for someone who carves out time.
I am meant to be held and loved without the sound of a clock's tick in the background.
I am deserving of lengthy stares and long kisses.
I fall into arms that hold me long, that hold me all night.
I am not your spare time.
I am not your fleeting seconds.
I am so much more than that.

**Zair abbas**
**Galgamuwa**

# Best Years of My Life

High school, the best years of your life
I would love to know why
All I do is stress stress stress
Worry about the zeros in my class's
Procrastinating the project till the night before
Ruining my body in track and basketball
Talking sparingly to my friends at lunch
No more free time,
No more playing with outside,
No more anything
Time of my life?

**M.I.M. Harees**
**Deltota**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

## I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரித்துப் போன மனிதாபிமானம்

**குட்டிக் கதை**

முதலாம் உலகப் போர் நடைபெற்ற காலம் ஜேர்மனி பெல்ஜியத்தை ஆக்கிரமித்திருந்தது. பெல்ஜியத்தில் பசியும் பட்டினியும் அதிகரித்திருந்தன. மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அமெரிக்கா அப்போது உலகப் போரில் இறங்கவில்லை; நடுநிலை வகித்திருந்த காலம். பெல்ஜியத்தில் நிலவும் பட்டினிச் சாவு பற்றியும் ஜேர்மனியின் அக்கிரமம் பற்றியும் பெல்ஜியத்திலிருந்த அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. அமெரிக்க மக்களிடையேயும் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

அமெரிக்க அரசு இது பற்றிச் சிந்தித்தது. ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு செய்தது. பெல்ஜியத்துக்கு ஒரு நிவாரணக்குழுவை அனுப்பத் தீர்மானித்தது. ஹுவர் என்பவரின் தலைமையில் நிவாரணக்குழு அனுப்பப்பட்டது. இதை கண்ட ஜேர்மன் கடும் அதிர்ச்சியடைந்தது. ''இங்கே எந்த நிவாரணமும் தேவையில்லை. உடனடியாகத் திரும்பி விடுங்கள்'' என்று விரட்ட ஆரம்பித்தது.

ஹுவர் ஜேர்மனியத் தளபதியைச் சந்தித்து மனிதாபிமான உதவியை அளிக்க இணங்குமாறு கேட்டுப் பார்த்தார். ''நாங்கள் வந்திருப்பது செத்து மடிந்து கொண்டிருப்பவர்களைக் காப்பாற்றத்தான்'' என்று கூறிப் பார்த்தார். ஆனால், ஜேர்மனியத் தளபதியோ இணங்கவில்லை.

ஹுவர் சிந்தித்தார். அவருக்கு ஓர் உபாயம் தோன்றியது. அதனைப் பிரயோகித்தார். ''தளபதியாரே! நாளைய வரலாற்றில் உங்கள் பெயர் எப்படி இடம்பெறும் என்பதையும் சற்றுச் சிந்தியுங்கள். ஆயிரக்கணக்கான பெல்ஜிய மக்கள் பட்டினியால் இறக்கக் காரணமாயிருந்தவர், கொலைகாரர் என்று இடம்பெறுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?'' என்று வினவினார். தளபதி அதன் பின்னர் எந்தத் தடையுமில்லாது சம்மதித்தார்.



**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. 96 ஆவது
2. நபி இப்றாஹிம் (அலைஹிஸ்ஸலாம்), நபி இஸ்மாயில் (அலைஹிஸ்ஸலாம்), அன்னை ஹாஜரா (ரழியல்லாஹு அன்ஹா)
3. ரமழான் மாதத்தில்
4. நிபாக்
5. உளத்தூய்மை
6. இமாம் புஹாரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள்
7. பெண்
8. நபி தாவூத் (அலைஹஸ்ஸலாம்) அவர்கள்
9. நபி ஸக்கரிய்யா (அலைஹஸ்ஸலாம்) அவர்கள்
10. ஹிஜ்ரி 13
11. ஹிஜ்ரி 41
12. ஹஸரத் அம்மார் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்

7. அபூ ஜந்தல் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்
8. அன்னை ஸபிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள்

**பொது அறிவு**

1. டொக்டர் சிறில் பொன்னம்பெரும
2. சேர்னோபில் அல்லது ஸ்லேஸ் இல்லர்
3. 1938
4. கலிங்கத்துப் போர்
5. நில்வளகங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 07

## பொலன்னறுவைக் காலம்


அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்ததெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

விஜயபாகுவின் மரணத்தோடு பொலன்னறுவை அரசியலில் பின்வந்த நான்கு தசாப்தங்கள் பல்வேறு சிக்கல்கள் நிறைந்த காலப் பிரிவாகவே அமைந்தன. கி.பி. 1110 இல் தனது 70 ஆவது வயதில் விஜயபாகு மரணமடைந்தான். இவனது மரணத்தைத் தொடர்ந்து அவனது தம்பியான ஜயபாகு அரச பொறுப்பை ஏற்க வேண்டி இருந்தபோதிலும் கூட, விஜயபாகுவின் மூத்த சகோதரியான மித்திரா மிக முக்கிய அரசியல் சதியொன்றைத்திட்டமிட்டிருந்தாள். இந்தவகையில், ஜயபாகு பெயரளவு அரசனாகவும் மித்திராவின் புதல்வர்களே உண்மையான நிர்வாகிகளாகவும் செயற்படும் நிலை பொலன்னறுவை அரசியலில் உருவானது. இது சுமார் அரை நூற்றாண்டு காலமாக இலங்கை பல கோர உள்நாட்டுப் பூசல்களையும் போர்களையும் சந்திப்பதற்கு காரணமாகியது.

விஜயபாகுவின் சகோதரியான மித்திராவின் மூத்த புதல்வனான மானாமரனின் மகனாக பராக்கிரமபாகு பிறந்தான். சூளவம்சத்தின் அத் 62 - 79 வரை பராக்கிரம பாகுவின் வாழ்வு பாடப்பட்டுள்ளது. சூளவம்சத்தின் பாட்டுடைத் தலைவனாகவும் மகாபராக்கிரமபாகு அமைந்துள்ளான். பராக்கிரமபாகு பெரு மன்னன் என்பதற்கான சான்றுகள் அவன் வாழ்வில் காணப்படுகின்றன. அவனது இளமைக் காலம் தற்போதைய குருணாகலை மாவட்டம், கேகாலை மாவட்டம் என்பவற்றில் கழிந்தது. பின்னர் இப்பிரதேசங்களின் ஆட்சியாளனாகவும் மாறினான். இவ்வகையில் இராஜரட்டை தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளின் அரசனாக பராக்கிரமபாகு கி.பி. 1153 இல் பொலன்னறுவையில் முடிசூடினான்.

பொலன்னறுவை யுகத்தின் கீர்த்திமிக்க அரசனான மகாபராக்கிரமபாகு கி.பி. 1153-1186 வரை இலங்கையின் மன்னனாகத் திகழ்ந்தான். இலங்கையின் அரசியல், பொருளாதார, கலை, இலக்கிய வரலாற்றில் அதி உன்னத இடம் இம்மன்னனுக்கு உண்டு. அவனது இப்பங்களிப்புகளின் அடையாளங்களாக பொலன்னறுவையின் அழிவுற்ற தொல்பொருளியல் சின்னங்களும் பராக்கிரம சமுத்திரமும் அமைந்துள்ளன. மகா பராக்கிரமபாகுவின் காலப் பிரிவில் வெளிநாட்டு வணிகமும் உள்நாட்டு வணிகமும் சிறப்பான வளர்ச்சி கண்டன.

பொலன்னறுவைக் காலம் பற்றிய குறிப்புக்களைத் தரும் அரபு புவியியலாளரான அல் இத்ரீஸி பராக்கிரமபாகுவின் சமகாலத்தவராவார். இவர் பராக்கிரமபாகு மன்னன் ஸ்தாபித்திருந்த 'அந்தரங்க தூத' எனும் வணிக சபை பற்றிய குறிப்பொன்றைத் தந்துள்ளார். இக்கலை வெளிநாடுகளில் அதிக கேள்வியுள்ள வணிகப் பொருட்கள் இலங்கையில் காணப்படும் பிரதேசங்களுக்கு பொறுப்பாக இருந்தது. இவ்வகையில் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய இரத்தினக் கற்கள், முத்து, யானை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் முதலானவை கிடைக்கும் பிரதேசங்களில் இருந்து அவற்றைப் பெற்று பாதுகாப்பாக ஏற்றுமதி செய்வதும் அவற்றைக் கண்காணிப்பதும் பராமரிப்பதும் இச் சபையின் பொறுப்பாக இருந்தது.

'அந்தரங்க துத' எனும் இச்சபையில் 4 முஸ்லிம்கள் இடம்பெற்றிருந்ததாக அல் இத்ரீஸி குறிப்பிடுகின்றார். அல் இத்ரீஸியின் இக்கருத்தை பேராசிரியர் எஸ். பரணவிதாரனவும் உறுதிப்படுத்தியுள்ளார். இந்த ஆலோசகர்கள் அரசனிடத்தில் தனி உரிமை பெற்றவர்களாகவும் அந்த அந்த சபையில் செல்வாக்கு மிக்கவர்களாகவும் இருந்துள்ளனர் எனக் கொள்ளலாம். இலங்கையைத் தரிசிக்காத புவியியலாளர் அல் இத்ரீஸி இவர்களைப் பற்றி அறியும் அளவுக்கு அன்றைய அரபுலகிற்கு இவர்கள் அறிமுகமாகி இருந்துள்ளமை இவர்கள் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கு சான்றாக அமைகின்றது. பேராசிரியர் பரணவிதான இக்காலப் பகுதியில் இலங்கையின் கரையோர துறைமுக நகர்களில் குறிப்பிடத்தக்க அளவு முஸ்லிம்கள் வாழ்ந்தனர் என்றும் அவர்கள் ஆட்சியாளர்களிடத்தே செல்வாக்கு செலுத்தத்தக்க வலிமையாளர்களாக இருந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இக்காலப் பிரிவில் அரபு வணிகர்கள் செறிந்து வாழ்ந்த இடமாக கொழும்பு அமைந்திருந்தது. இக்காலப் பிரிவில் வாழ்ந்த பல்துறை மேதை அல் பிரூனி தனது 'கிதாபுல் ஜமாஹிர் பீ மஃரிபதில் ஜவாஹிர்' எனும் நூலில் தரும் செய்தி ஒன்று இதற்கு பிரதான சான்றாக அமைகிறது.

''அபூ பஷர் அஸ்ஸீராபி ஸெரன்டிபில் அவனது மாமனார் வீட்டில் இருந்தபோது அவரது மாமனார் ஒரு சிவப்பு மாணிக்கக் கல்லை வரவழைத்து அதிலிருந்து பரவிய ஒளியின் துணை கொண்டு ஒரு புத்தகத்தைப் படித்தார்.''



இக்குறிப்பு கொழும்பில் மாணிக்கக் கற்களை வைத்து பெரு வணிகம் செய்யும் வணிகர்கள் இருந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றது.

கி.பி. 1153 இல் பராக்கிரமபாகு மரணமடைந்ததைத் தொடர்ந்து அவனது மருமகனான 2 ஆம் விஜயபாகு அரசனானான். இவன் பராக்கிரமபாகுவின் சகோதரி மகனாவான். கலிங்க நாட்டில் வாழ்ந்த இவன் பராக்கிரமபாகுவால் வரவழைக்கப்பட்டு பராக்கிரமபாகுவின் வாரிசாக அறிமுகப்படுத்தப்பட்டான். எனினும், அரச சபை உறுப்பினர்களும் அமைச்சர்களும் இவன் அரசனாவதை ஆதரிக்கவில்லை. இதனால் கலவரங்கள் தூண்டி விடப்பட்டன. இக்கலகங்களை அடக்கி ஓராண்டு 2 ஆம் விஜயபாகு ஆட்சி செய்தான். பின்னர் அரசியல் சதி ஒன்றின் மூலம் கொல்லப்பட்டான். அதனைத் தொடர்ந்து பொலன்னறுவையின் வரலாற்றில் சிறப்பிடம் பெறும் நிஸங்கமல்லன் (1187 - 1198) அரச கட்டிலேறினான்.

நிஸங்கமல்லனின் காலப் பிரிவில் கலை, கலாசார, பொருளாதாரத் துறைகளில் இலங்கை செழித்தோங்கியது. இலங்கையில் அதிக சிபாசனங்களை விட்டுச் சென்றுள்ள மன்னனாகவும் இவன் கருதப்படுகிறான். கி.பி. 1196-1215 வரையான 19 வருடங்களில் 12 ஆட்சியாளர்கள் பொலன்னறுவையை ஆட்சி செய்துள்ளனர். இது இக்காலப் பிரிவில் நிலவிய அரசியல் சிக்கல்களை தெளிவாக உணர்த்துகின்றது. 1215 இல் கலிங்க விஜயபாகு என அழைக்கப்படும் கலிங்க மாகன் படையெடுத்து வந்து இலங்கையைக் கைப்பற்றிக் கொண்டான். கி.பி. 1235 வரை இவனது ஆட்சி நிலவியது.

மகா பராக்கிரமபாகுவின் மறைவுக்குப் பின்னரான பொலன்னறுவை அரசியலில் முஸ்லிம்களின் வகிபாகம் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைக் காட்டக்கூடிய தெளிவான சான்றுகள் எதுவும் இல்லை. எனினும், நாம் ஏற்கனவே குறித்தது போன்று துறைமுக நகர்களில் முஸ்லிம்கள் கணிசமாக குடியிருந்தமையும் வெளிநாட்டு வணிகத்தில் அவர்களே ஈடுபட்டிருந்தமையும் இக்காலப் பிரிவிலும் எவ்வித மாற்றத்தையும் அடைந்திருக்க முடியாது. நெடுங்காலம் நிலவிய வணிக முறைமையொன்றை திடீரென்று மாற்றியமைக்க முடியாது என்பது தெளிவானதாகும். எனவே, 1186-1215 வரையான காலப் பிரிவிலும் அதற்குப் பின்னரும் முஸ்லிம்கள் தம் பணியை தொடர்ந்திருப்பார்கள் என்பதே ஏற்புடையதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வாப்பாவின் தவறு

அம்னா தனக்குள் சிரிப்பதா அழுவதா என்று எதுவும் புரியாதவாறு தனிமையில் அமர்ந்திருந்தாள். ஆயிஷா ராத்தாவின் குரல் கேட்டுத்தான் அவள் சுயநினைவுக்கு வந்தாள்.

''என்ன புள்ள அம்னா... கடுமையாய் யோசிக்கின்றாய் போல... எல்லாம் அல்லாஹ்ட நாட்டப்படிதான் நடக்கும். நீ முதல்ல அல்லாஹ்வுடனான உறவை கூட்டிக் கொள். இந்த வீடு 10 வருஷங்களுக்கு முன்னால தொழுகையும் ஓதலுமாக இருந்த இடம். இப்போ உனக்கு தொழக்கூட நேரமில்லை, மனசுமில்லை''

என்று பட்டும் படாமலும் சொல்லி விட்டுப் போகின்றாள் பக்கத்து வீட்டு ஆயிஷா ராத்தா.

என் கண்களில் நீர்த் துளிகள். என் உள்ளமோ என் உணர்வுகளுடன் பேசத் தொடங்கியது. எனது வாப்பா சிறு வயதில் அநாதையாக்கப்பட்டவர். கடும் கஷ்டத்தின் மத்தியில் வளர்ந்ததால் அவருக்கு கல்வியறிவு கிடைக்கவில்லை. ஆதலால், ஒரு கைத்தொழிலைப் பழகிக் கொண்டார். நாளடைவில் தொழிலில் பறக்கத், குடும்பம் பிள்ளை என பல சொந்த பந்தம்... அலட்டிக் கொள்ளாத வாழ்க்கை. ஆனால்... அவரது உள்ளம் நிம்மதியை தேடி அலைந்தது. யதார்த்தமாக சிந்தித்தார். உள்ளத்தின் வெறுமையை உணர்ந்தார். தன் பிள்ளைகளிடம் குர்ஆன் ஓதப் பழகினார். தவறாது ஐவேளை ஜமாஅத்தோடு தொழலானார். பல தஃவா பயிற்சிகளையும் பெற்றார். தொழுகை, நோன்பு போன்ற கிரியைகளை வளர்த்துக் கொண்டாரே தவிர, ஈமானின் மறுவடிவங்களான இமாரத், அஹ்லாக், முஆமலாத் போன்ற பக்கங்களை புரட்டிக் கூடப் பார்க்காமல் இபாதத்தே அவரது வாழ்க்கையானது.

அவர் கற்ற கல்வி பூரண இஸ்லாத்தைக் கொடுக்கவில்லை. குர்ஆனை நீண்ட நேரம் ஓதுவார். பிள்ளைகளையும் தஹஜ்ஜுத்தில் எழுப்பி ஓதச் சொல்வார். குர்ஆன் என்ன சொல்கின்றது என்பது அவருக்கு தெரியாது. இதுதான் அவர் அறிந்த, கற்றுக் கொண்ட இஸ்லாம்.

எனக்கும் ஜாலியான வயதுதான். மாப்பிள்ளை தேடும் படலமும் ஆயிற்று. (மாப்பிள்ளையின் தரம் தொழில்தான்) மாப்பிள்ளை நல்ல வியாபாரி, திருமணமும் முடித்தாகி விட்டது. வாப்பா தொழிலைப் பார்த்தாரே தவிர தீனைப் பார்க்க தவறிவிட்டார். திருமண விடயத்தில் இஸ்லாமிய சட்டம், பண்புகள், படித்தரங்கள் இருக்குமெனக் கூட அவருக்குத் தெரியாது. மற்றவர்கள் சொல்லிக் கொடுத்ததுமில்லை.



மின்னாஹ் ஹஸன் ஜாபீர், அக்கரைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமாகி சில வருடங்களில் வாப்பாவும் மௌத்தாகி விட்டார். காசு உள்ள மனிதரென்பதால் நான் என் கணவரின் தவறுகளை அலட்டிக் கொள்ளவில்லை. மழைக்குக் கூட பள்ளிவாசலின் பக்கம் ஒதுங்காதவர். என்னுடைய தொழுகைகள், நோன்பு காலம் மட்டும்தான் என மட்டுப்படுத்தப்பட்டது. நாங்கள் நோன்பு பிடிப்போம், அவர் பிடிக்க மாட்டார். இப்தாருக்குரிய ஒழுங்குடன் வருவார். நாங்கள் அதை பெருங்குறையாக கண்டு கொள்வதில்லை.

''நோன்பு பிடிக்காட்டி என்ன?''

அது ஒரு பாவமாகக் கூட விளங்கவில்லை.

காலச்சக்கரம் உருண்டோடியது. இரண்டு பிள்ளைகளுக்கு தாயானேன். கணவரின் வியாபாரத்தில் பாரிய நஷ்டம். கணவர் தொழிலில்லாமல் வீட்டில் இருக்கும்போதுதான் சிந்திக்கின்றேன். என் கணவர் செய்த தொழில் ஹராமா? ஹலாலா? என்று. வீடு வளவு வங்கியில். தாய், உற்றார் உறவினர் ஆகியோரின் நகைகளும் அடகுக் கடையில். எனது தங்கையின் வீடு விற்றுப் பணம். எது செய்தும் கடன் குறைந்தபாடில்லை.

ஒரு பக்கம் கடன்காரர்களின் பிரச்சினை, மறுபக்கம் மன அமைதியின்மை, பயம் இத்தனையிலும் புதுமை என்னவெனில் என்னிலோ, என் கணவரிலோ அல்லாஹ்வை நெருங்கும் எண்ணம் கொஞ்சம் கூட வரவில்லை. இது ஆயிஷா தாத்தாவிற்கு நன்றாகத் தெரிந்தது. அதனால்தான் அந்த ஆழமான வார்த்தைகள். புரிந்து கொண்டேன். என் எல்லா நெருக்கடியான வாழ்விற்கும் காரணம் என் வாப்பாவின் தவறுதான். எனக்கு தீனுள்ள துணையை தேர்வு செய்ய தவறிவிட்டார். செல்வம், தொழில் அந்தஸ்தைத்தான் பார்த்தாரே தவிர மார்க்கப் பற்றைப் பார்க்க மறந்துவிட்டார்.

வானொலியில் குர்ஆன் வசனம் என் காதில் விழுகின்றது.

''எவன் என்னுடைய திக்ரைப் புறக்கணிக்கின்றானோ அவன் நெருக்கடியான வாழ்விற்கு உட்படுவான்...'' (20:124)

---

சிந்தனைக் கதை



# எவ்வளவு வெயிட்?

ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்தார். மேசை மீதிருந்த கண்ணாடிக் கிளாஸை எடுத்துக் காட்டி ''இது எவ்வளவு வெயிட் இருக்கும்?'' என்று கேட்டார். 100 கிராம், 50 கிராம் என்று மாணவர்கள் ஆளாளுக்கு ஓர் எடையை சொன்னார்கள். ''இதனுடைய சரியான எடை எனக்கும் தெரியாது. ஆனால், என்னுடைய கேள்வி அதுவல்ல... இதை நான் கையிலே பிடிச்சிக்கிட்டிருந்தேன்னா என்ன ஆகும்?''

''ஒண்ணுமே ஆகாது சேர்...''

''வெரிகுட். ஆனா, ஒரு மணிநேரம் இப்படியே பிடிச்சிக்கிட்டிருந்தேன்னா?''

''உங்க கை வலிக்கும் சேர்...''

''ஒரு நாள் முழுக்க இப்படியே வெச்சிருந்தேன்னா...''

''உங்க கை அப்படியே மரத்துடும் சேர்...''

''வெரி வெரி குட். ஒரு மணி நேரத்துலே என் கை வலிக்கிறதுக்கும், ஒரு நாளிலே மரத்துப் போகிற அளவுக்கு மாறுவதுக்கு இந்த கிளாஸின் வெயிட் கூடிக்கிட்டே போகுமா என்ன?''

''இல்லை சேர்... அது வந்து...''

''எனக்கு கை வலிக்காம, மரத்துடாம ஆகணும்னா நான் என்ன பண்ணணும்?''

''கிளாஸை உடனே கீழே வெச்சுடணும் சேர்...''

''அப்படியென்றால், இந்த கிளாஸ்தான் பிரச்சினை. ஒரு பிரச்சினை நமக்கு வந்தது என்றால் அதை அப்படியே மண்டைக்கு ஏத்தி ஒரு மணிநேரம் வெச்சிட்டு இருந்தோம் என்றால் வலிக்க ஆரம்பிக்கும். ஒரு நாள் முழுக்க அப்படியே வெச்சிருந்தா மூளை செயலிழந்து மரத்துடும். அதனாலே, உங்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்தால் தூக்கி ஓர் ஓரமாக வைத்து விடுங்கள். அதுவே சரியாகிவிடும்... சரியா?''


இதுதான் மனவியல் ரீதியிலான தீர்வு.

இணையத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இளம் கண்டுபிடிப்பாளர்களை இனங்காணும் போட்டியில் கலந்து அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று இந்தோனேஷியாவுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட கொழும்பு சாஹிரா கல்லூரின் மாணவன் எல்.எம். மின்ஹாஜ் உடனான ஒரு நேர்காணல்.

**நேர்காணல்: அரூஸ் யூசுப் (நளீமி)**

# "எனது சாதனைகள் மூலம் தாய் நாட்டுக்கு சேவையாற்ற விரும்புகிறேன்"

**அகரம்:** உங்களைப் பற்றி ஓர் அறிமுகத்தை தர முடியுமா?

**எல்.எம். மின்ஹாஜ்:** நான் கொழும்பு சாஹிரா கல்லூரியில் 11 ஆம் தரத்தில் ஆங்கில மொழிமூலம் கற்று வருகிறேன். எனது தந்தையின் பெயர் ஏ.எல். ஜவ்பர். அவர் ஒரு வியாபாரி. எனக்கு ஒரு சகோதரர் இருக்கிறார். அவரும் தற்போது பாடசாலைக் கல்வியை தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

**அகரம்:** உங்களது கண்டுபிடிப்பு பற்றி கூறுங்கள்?

**எல்.எம். மின்ஹாஜ்:** 'கழிவுப் பொருட்களை பயன்படுத்தி உயர் பிரயோசனத்தை பெறுதல்' எனும் தொனிப்பொருளில் பழைய பிளாஸ்திக் போத்தல்களைப் பயன்படுத்தி நீரால் இயங்கும் ஏவுகணை ஒன்றை நான் உருவாக்கியுள்ளேன்.

**அகரம்:** அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற பின் உங்களது தற்போதைய மனோநிலை எவ்வாறுள்ளது?

**எல்.எம். மின்ஹாஜ்:** உண்மையில் வாழக்கையில் ஏதோ ஒன்றை சாதித்து விட்டேன் என்ற மகிழ்ச்சி உள்ளத்தில் காணப்படுகிறது. அதேபோல, என்னால் இன்னும் பல சாதனைகளை வெளிப்படுத்த முடியும் என்ற தன்னம்பிக்கையும் பிறந்துள்ளது. இந்த சாதனையை நிலைநாட்ட தொடராக ஆறு மாதங்கள் சிறந்த முறையில் பயிற்சியைப் பெறலானேன். எனது இந்த தொடரான விடா முயற்சியே எனது பல வெற்றிகளுக்கு காரணமாக இருக்கும் என இப்போது நான் நம்புகிறேன். எனது முயற்சிக்கு அல்லாஹ் தந்த பரிசாக எனது இந்தோனேஷியா சுற்றுலாவை நான் உணர்கிறேன்.

**அகரம்:** உங்களது பொழுதுபோக்குகள், வெளிக்கள செயற்பாடுகள் பற்றிக் கூறுங்கள்.

**எல்.எம். மின்ஹாஜ்:** விஞ்ஞானத்துடன் தொடர்புடைய புத்தகங்ளையே நான் அதிகம் வாசிக்க விரும்புவேன். அந்த வாசிப்பைத்தான் எனது பொழுதுபோக்காகவும் எடுத்துள்ளேன். மேலும், தற்காப்புக் கலையிலும் சிறந்த ஆர்வமுள்ளது. பல பதக்கங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் ஞாபகத்தை பொறுத்தவரையில் குறுகிய கால ஞாபகப் பகுதி, நீண்ட நாள் ஞாபகப் பகுதி என இரண்டாக வகுக்கலாம். நாம் கற்கின்ற விடயங்கள் நீண்ட நாள் ஞாபகப் பகுதியில் பதிய வேண்டுமாயின் கற்ற விடயத்தை பத்து நிமிடத்துக்குள் மீட்ட வேண்டும். தொடர்ந்து 24 மணித்தியாலத்துக்குள் மீண்டும் குறித்த விடயத்தை சற்று ஆழமாக மீட்ட வேண்டும்.

பெற்றுள்ளேன். அத்தோடு, ஐ.பி. லங்கா போட்டியில் வெற்றி பெற்று பணப் பரிசில்களையும் பெற்றுள்ளேன்.

**அகரம்:** சமூக ஊடகங்களுடனான உங்களது ஈடுபாடு எவ்வாறுள்ளது?

**எல்.எம். மின்ஹாஜ்:** மனிதனது வாழ்க்கைக்கு ஊடகம் இன்றியமையாததாகும். இருந்த போதிலும் நான் அதிக நேரத்தை அதில் ஈடுபடுத்த தற்போது விரும்பவில்லை. தேடலுடன் கூடிய அவசியம், அறிவுக்கு விருந்தான விடயங்கள் என்று வரும்போது மாத்திரம் சமூக வலைத்தளங்களை நாடிச் செல்வேன்.

**அகரம்:** உங்களது பாட மீட்டல் முறைமையைப் பற்றிக் கூறுங்களேன்?

**எல்.எம். மின்ஹாஜ்:** மனிதனின் ஞாபகத்தை பொறுத்தவரையில் குறுகிய கால ஞாபகப் பகுதி, நீண்ட நாள் ஞாபகப் பகுதி என இரண்டாக வகுக்கலாம். நாம் கற்கின்ற விடயங்கள் நீண்ட நாள் ஞாபகப் பகுதியில் பதிய வேண்டுமாயின் கற்ற விடயத்தை பத்து நிமிடத்துக்குள் மீட்ட வேண்டும். தொடர்ந்து 24 மணித்தியாலத்துக்குள் மீண்டும் குறித்த விடயத்தை சற்று ஆழமாக மீட்ட வேண்டும். அப்போதுதான் கற்றவை நீண்ட நாள் ஞாபக பகுதியில் பதிவாகும். மேலும், அதிகாலை நேரத்தை நான் எனது பாட மீட்டலுக்கான சிறந்த நேரமாக கண்டுள்ளேன்.

**அகரம்:** உமது நண்பர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

**எல்.எம். மின்ஹாஜ்:** சில மாணவர்கள் பாடங்களில் கூடிய கரிசனை காட்டினாலும் கூட பரீட்சை எனும்போது தளர்ந்து விடுகின்றனர். கல்வி நடவடிக்கைக்கு ஒரு பாரிய தடையாகவே பரீட்சையை இவர்கள் கருதுகின்றனர். அந்த தடையை ஒரு சவாலாக நாம் நோக்க வேண்டும். அந்த சவாலை முறியடிப்பதற்கான முன்னேற்பாடுகளை நாம் ஆரம்பம் தொட்டே மேற்கொள்ள வேண்டும். அதாவது, நேரகாலத்தோடு விழித்தல், சிறந்த பாட மீட்டலுடனான சிறுகுறிப்பு எடுத்தல், மாதிரி வினாக்கள் உட்பட பயிற்சிகளைச் செய்தல் போன்ற விடயங்களை மேற்கொண்டால் பரீட்சை எமக்கு ஒருபோதும் சுமையாக விளங்காது. இதற்கு மாறாக செயற்பட்டால்தான் இறுதியில் அவசியமற்ற பதகளிப்புக்கள் ஏற்பட காரணமாகிறது.

**அகரம்:** உங்களது இலட்சியம் பற்றி கூற முடியுமா?

**எல்.எம். மின்ஹாஜ்:** சிறு வயதிலிருந்து எனது உம்மா நான் ஒரு விஞ்ஞானியாக வர வேண்டும் என்று என்னை ஊக்குவிப்பார். அந்த சிறுவயது ஊக்குவிப்பு இன்றும் என்னை ஆட்கொண்டுள்ளது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் இந்த துறையில் ஆர்வம் கொள்பவர்கள் பலர் இருந்தாலும் சாதிப்பவர்கள் அரிதாகவே காணப்படுகிறார்கள். என்றாலும், இதனை எனக்கான ஒரு சவாலாக ஏற்று சாதிப்பேன் என்ற நம்பிக்கை எனக்குள் காணப்படுகிறது. எனது சாதனைகள் மூலம் தாய்நாட்டுக்கு நல்ல பல சேவைகளை ஆற்ற விரும்புகிறேன்.

**அகரம்:** நீங்கள் யார் யாருக்கு நன்றி கூற விரும்புகிறீர்கள்?

**எல்.எம். மின்ஹாஜ்:** முதலில் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தியவனாகவும் எனது இரு கரங்களாக செயற்பட்ட எனது தாய், தந்தைக்கும் உறவினர்களுக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் நண்பர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தைத் தந்த அகரம் சஞ்சிகை குழுவினருக்கும் நன்றிகளை கூற கடமைப்பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நச்சுத் தன்மையற்ற சுரண்டலற்ற உர நிவாரணம்

2016 பெப்ரவரியில் உள்நாட்டு விவசாயத்தை பலப் படுத்தும் பொருட்டு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய வேலைத் திட்டம் செயற்படுத்தப்பட்டது.


நெற்பயிர்ச் செய்கை விவசாயிகளுக்காக சிறுபோ கம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரண்டுக்கும் ஒரு ஹெக்டெயருக்கு ரூபா 2500 ஆகும்.

## உலகின் உயரமான கட்டடம்

- ஜப்பானானது ஒரு மைல் (5,557 அடி) உயரமான உலகின் மிகவும் (உயரமான கட்டிடத்தை) நிர் மாணிக்க திட்டமிட்டுள்ளது.
- ஸ்கை மைல் கோபுரம் என அழைக்கப்படும் இந் தக் கட்டடம் நெக்ஸ்ட் டோக்கியோ என அழைக் கப்படும் பிராந்தியத்தில் நிர்மாணிக்கப்பட உள் ளது.
- இந்தக் கட்டடத்தின் நிர்மாண பணிகள் 2045 ஆம் ஆண்டளவில் பூர்த்தியடையலாம் என கூறப்படு கிறது.
- இந்த கட்டடம் உலகின் மிகவும் உயரமான கட்ட டமாக தற்போது விளங்கும் டுபாயிலுள்ள 2,717 அடி உயரமான புர்ஜ் கலிபா கட்டடத்தை விடவும் இரு மடங்கு உயரமானதாகும்.

## முன்பிள்ளைப் பருவ மேம்பாட்டு செயற்திட்டம்

- 2016 பெப்ரவரியில் உலக வங்கி அனுசரணையு டன் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு இலங்கையில் முன்பிள்ளைப் பருவ மேம்பாட்டு செயற்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்தது.
- இந்த செயற்திட்டத்தின் நோக்கங்களாவன:
  - சம வாய்ப்புகளை அதிகரித்தல்.
  - முன்பிள்ளைப் பருவ மேம்பாட்டு சேவைகள் மற்றும் நிலையங்களின் தரத்தை மேம்படுத்தல்.
- இலங்கையில் முன்பிள்ளைப் பருவம் என்பது ஐந்து வரையான பிள்ளைப் பருவத்தை குறித்து நிற்கிறது.
- இலங்கையில் ஏறத்தாழ 17 ,500 முன்பிள்ளைப் பருவ மேம்பாட்டு நிலையங்கள் உள்ளதுடன் 29, 350 ஆசிரியர்கள் இங்கு செயலாற்றுகின்றனர்.




திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (PDE) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo

## உலக வானொலி தினம்

- உலக வானொலி தினம் வருடாந்தம் பெப்ரவரி 13 ஆம் திகதி கொண்டா டப்பட்டு வருகின்றது.
- முதலாவது உலக வானொலி தினம் இத் தாலியில் அமைந்துள்ள பீசா பல்கலைக்கழகத்தில் 2012 ஆம் ஆண்டு பெப் ரவரி 13 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இவ் வாறு பிரகடனம் செய்யப்பட்டமைக்கான பிரதான காரணம் 20 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் வானொ லிச் சேவையை கண்டுபிடித்த மார்க்கோணி என்ற பொறியியலாளர் இத்தாலியின் பீசா நகரிலேயே சர்வதேச வானொலி தினத்தை ஏற்படுத்தியமை ஆகும்.
- 1925.12.16 ஆம் திகதி உத்தியோகபூர்வ ஒலிபரப் புச் சேவை இலங்கையில் மலர்ந்தது.
- 1949 இல் ரேடியோ சிலோன் என்ற திணைக்களம் தபால் அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டது.
- 1967.01.05 இல் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தா பனமாக மாற்றப்பட்டது.
- 1993 இல் லிவி விஜயமான FM 99 என்ற பண் பலை வானொலியை முதலாவது தனியார் வானொலி நிலையத்தை ஆரம்பித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யானைத் தந்தங்களை எரித்து அழிக்கும் நிகழ்வு

- 2012 இல் கென்யாவில் இருந்து இலங்கை ஊடாக டுபாய்க்கு சென்று கொண்டிருந்த கப்பலொன்றில் 40 கோடி பெறுமதியான இரத்தம் தோய்ந்த 359 யானைத் தந்தங்கள் இலங்கை கடலில் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன.
- இது தெற்காசிய பிராந்தியத்தில் முதற்தடவையாக மேற்கொள்ளப்பட்ட பாரிய சுங்கச் சுற்றிவளைப்பாகும்.
- கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக சுங்கத்தின் பொறுப்பிலிருந்த யானைத் தந்தங்கள் 2016.01.26 இல் ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் காலி முகத்திடலில் எரித்து அழிக்கும் நிகழ்வு இடம் பெற்றது.

## ஹெய்டியின் இடைக்கால ஜனாதிபதி




- 2016 பெப்ரவரியில் ஹெய்டியின் ஜனாதிபதியாக இருந்த மைக்கல் மார்ட்டி நெல்லி தனது பதவியை அடுத்த ஜனாதிபதி தெரிவு செய்யப்படாமலேயே ஐந்து வருட ஆட்சியை நிறைவு செய்தார்.
- புதிய ஜனாதிபதி தேர்தல் 2016.04.24 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இடைக்கால ஜனாதிபதியாக ஜோசீ லேமி பிரிவேர்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## பாடசாலை மின்சக்தி சமூகம் செயற்படுத்தும் 2000 வேலைத்திட்டங்கள்


மின்சக்தி முகாமைத்துவம் மற்றும் மின் புத்தாக்க சக்தி பாவனையினால் எதிர்கால மின்சக்தி மற்றும் சுற்றுச் சூழல் சவால்களை வெற்றி கொள்வதற்கு செயல்முறை அறிவினால் மற்றும் திறமையினால் பூரணமான மாணவர் தலைமுறையை உருவாக்கும் நோக்கத்துடன், கல்வி அமைச்சுடன் இணைந்து மின்வலு மற்றும் மின் புத்தாக்க சக்தி அமைச்சின் இலங்கை தேசிய மின் புத்தாக்க சக்தி ஆணையகத்தினால் 2016 பெப்ரவரியில் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டமாகும்.

## விருசர சிறப்புரிமை அட்டை




- 2016 ஜனவரியில் இலங்கை பாதுகாப்பு அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட அபிமானத்திற்குரிய இராணுவ வீரர்களுக்கேயான விருசர சிறப்புரிமை அட்டை இதுவாகும்.
- நாட்டின் சுதந்திரத்திற்காக உடல், உள ரீதியாக நிகரற்ற பங்களிப்பை வழங்கிய தரைப்படை, கடற்படை, வான்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு சேவை வீரர்களின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் வலுவிழந்த படை வீரர்களின் சேமநல மேம்பாட்டிற்கான விசேட சலுகைகளுடன் வழங்கப்படுவதே இவ்விருசர சிறப்புரிமை அட்டைகளாகும்.

## வெளிநாட்டினரை வெளியேற்றும் திட்டம்



- 2016 பெப்ரவரியில் சுவிட்ஸர்லாந்தில் சிறு குற்றங்களுக்கு கூட வெளிநாட்டினரை தானாக நாடு கடத்தக் கூடிய திட்டமொன்றை சுவிட்ஸர்லாந்து மக்கள் நிராகரித்துள்ளனர்.
- வலது சாரி சுவிஸ் மக்கள் கட்சியினால் பரிந்துரைக்கப்பட்ட இந்த திட்டம் மக்கள் வாக்கெடுப்பதற்கு விடப்பட்டபோது இந்த திட்டத்தை 59 வீதமான வாக்காளர் நிராகரித்துள்ளனர்.
- சுவிட்ஸர்லாந்து மக்கள் தொகையில் 25 வீதத்தினர் வெளிநாட்டினராவர். அங்கு சுமார் இரண்டு மில்லியன் வெளிநாட்டு கடவுச் சீட்டு கொண்டவர்கள் நிரந்தரமாக வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை சுங்கம்

- உலகின் மிகப் பழைய தொழில்களில் இரண்டாவது இடத்தில் சுங்கம் காணப்படுகின்றது.
- நாட்டின் அரச வருமானத்தில் 50% ற்கும் மேலாகத் திரட்டித் தருவது இலங்கை சுங்கமே ஆகும்.
- இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் இலங்கை சுங்கத் திணைக்களம் இதுவரையும் நீண்டகால பயணத்தை மேற்கொண்டு வந்துள்ளது.
- இலங்கை சுங்கத் திணக்களம் 1998 இல் மேம்பட்ட கணினி தொழில்நுட்பத்தின் பிரவேசத்ததுடன் 2010 இல் உலகின் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுங்க கணினி முறைமையான Single Window System, ஆசிகுடா, இணையதள சேவைகள் அறிமுகப்படுத்தப் பட்டதுடன் எதிர்காலத்தில் டிஜிட்டல் முறைமைக்கு உட்படுத்தப்படவுள்ளது.
- சுங்கத் திணைக்களம் 1806 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படுவதுடன், இலங்கை சுங்கம் புதிய யுகத்தினுடன் 1869 இல் 1869 ஆம் ஆண்டின் 17 ஆவது சட்டத்தின் மூலம் பிரவேசித்தது.
- ஐரோப்பிய நாடுகளின் 17 பேர் அடங்கிய சுங்க ஒத்துழைப்பு அமைப்பு 1953 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் இதுவே சர்வதேச சுங்க தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## விலங்கு நல்வாழ்வு சட்டமூலம்

- 2016 பெப்ரவரியில் விலங்கு நல்வாழ்வு வரைபுச் சட்டமூலம் ஒன்று அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இவ்விலங்கு நல்வாழ்வு சட்டமூல வரைபானது 1907 ஆம் ஆண்டின் விலங்குகள் மீதான துன்புறுத்தல் தடுப்பு கட்டளைச் சட்டதிற்கு பதிலாகவே கொண்டு வரப்பட்டதாகும்.
- ஆசிய நாடுகளான இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளும் தத்தமது விலங்கு நல்வாழ்வு தொடர்பான சட்டங்களை காலத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க நடைமுறைப் படுத்துகின்றன.

## டெனிஸ் ஆடவர்களுக்கான பரிசுத் தொகை அதிகரிக்கப்பட வேண்டும்

ஆடவர் ஆட்டங்களை கூடுதல் ரசிகர்கள் காண்கிறார்கள் என்பதால் அவர்களுக்கான பரிசுத் தொகை அதிகமாக இருக்க வேண்டும் என்ற கருத்து சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

இண்டியானா வெல்ஸில் நடைபெற்ற பிஎன்பி பரிபா ஓபன் டென்னிஸ் போட்டியை வென்ற பிறகு உலக ஆடவர் டென்னிஸ் தரப்பட்டியலின் முதலிடத்தில் இருக்கும் யாக்கோவிச் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பரிசுகள் நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த இக்கருத்து வாதப்பிரதிவாதங்களை எழுப்பியுள்ளது.

**''புள்ளிவிபரங்களின் அடிப்படையின் பரிசு இருக்க வேண்டும்'' என்கிறார் யாக்கோவிச்**

''ஒரே நேரத்தில் ஆடவர் மற்றும் மகளிர் போட்டிகள் இடம்பெறும்போது ரசிகர்களின் எண்ணிக்கை தொடர்பில் புள்ளிவிபரங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'' என யாக்கோவிச் கூறியிருந்தார்.

மகளிருக்கான டென்னிஸ் போட்டிகள் என்பது ஆடவர்களின் வாலைப்பிடித்துக் கொண்டு பயணிப்பது போல என இண்டியானா வெல்ஸ் போட்டிகளின் தலைமை செயல் அதிகாரி ரேமண்ட் மூர் முன்னர் கருத்து தெரிவித்திருந்தார்.

**மூர் தெரிவித்த கருத்துக்களுக்கு செரினா வில்லியம்ஸ் கண்டனம்**

அந்தக் கருத்தை மகளிர் டென்னிஸ் தரப்பட்டியலின் முதலிடத்தில் இருக்கும் செரீனா வில்லியம்ஸ் உட்பட பலர் கடுமையாகக் கண்டிருந்திருந்தனர். தனது கருத்துக்களுக்காக மூர் பின்னர் மன்னிப்பு கோரினார். அவரது அந்தக் கருத்துக்கள் சரியானவை அல்ல என்று யாக்கோவிச் தெரிவித்துள்ளார்.

மகளிர் கடுமையாகப் போராடி தமக்கு தேவையானதைப் பெற்றுக் கொண்டனர் எனக் கூறிய யாக்கோவிச், ஆடவர் டென்னிஸ் உலகில் உள்ளவர்கள் கூடுதலான பலன்களைப் பெற போராட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆடவர் டென்னிஸ் போட்டிகளை கூடுதலான மக்கள் காண்கிறார்கள் என்பதை புள்ளிவிபரங்கள் காட்டுவதால், அவர்களுக்கு கூடுதல் பரிசுத் தொகை கிடைக்க வேண்டும் என்பதற்கு அது ஒரு காரணமாக உள்ளது என செர்பியாவை சேர்ந்த நோவாக் யாக்கோவிச் வாதிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையை விதையுங்கள்

ஒரு மிகப் பெரிய நிறுவனத்தின் முதலாளி தனக்கு வயதாகி விட்டதால் அவர் நிறுவனத்தின் பொறுப்பை அவரிடம் வேலை செய்யும் ஒரு திறமையானவரிடம் ஒப்படைக்க முடிவு செய்தார். எல்லோரும் தன் அறைக்கு வருமாறு கட்டளை இட்டார்.

உங்களில் ஒருவர்தான் என் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க வேண்டும். அதனால் உங்களுக்கு ஒரு போட்டி வைக்கப் போகிறேன். யார் வெற்றியடைகிறார்களோ அவர்தான் அடுத்த மேலாளர் என்றார்.

என் கையில் ஏராளமான விதைகள் இருக்கின்றன. இதை ஆளுக்கு ஒன்று கொடுப்பேன். இதை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு தொட்டியில் நட்டு, உரம் இட்டு தண்ணீர் ஊற்றி நன்றாக வளர்த்து, அடுத்த வருடம் என்னிடம் காட்ட வேண்டும். யார் செடி நன்றாக வளர்ந்து இருக்கிறதோ அவரே என் கம்பனியின் பொறுப்பை ஏற்பார் என்றார்.

ஒரு வாரம் கழிந்தது. நிறுவனத்தில் இருக்கும் அனைவரும் தங்கள் தொட்டியில் செடி வளர ஆரம்பித்து விட்டது என்று பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். ஆனால், ராமுவின் தொட்டியில் செடி இன்னும் வளரவே ஆரம்பிக்கவில்லை.

ஒரு மாதம் ஆனது; செடி வளரவில்லை. நாட்கள் உருண்டோடின. ஆறு மாதங்கள் ஆனது; அப்பொழுதும் அவன் தொட்டியில் செடி வளரவே இல்லை. ''நான் விதையை வீணாக்கிவிட்டேனா?'' என்று புலம்பினான். ஆனால், தினந்தோறும் செடிக்கு தண்ணீர் ஊற்றுவதை நிறுத்தவில்லை. தன் தொட்டியில் செடி வளரவில்லை என்று அலுவலகத்தில் யாரிடமும் சொல்லவில்லை.

ஒரு வருடம் முடிந்துவிட்டது. எல்லோரும் தொட்டிகளை முதலாளியிடம் காட்டுவதற்காக எடுத்து வந்தார்கள். ராமு தன் மனைவியிடம் ''காலி தொட்டியை நான் எடுத்துப் போக மாட்டேன்'' என்று சொன்னான். அவன் மனைவி அவனை சமாதானப்படுத்தி ''நீங்கள் ஒரு வருடம் முழுக்க உங்கள் முதலாளி சொன்ன மாதிரி செய்தீர்கள். செடி வளராததற்கு நீங்கள் வருந்த வேண்டியதில்லை. நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். தொட்டியை எடுத்துச் சென்று முதலாளியிடம் காட்டுங்கள்'' என்றாள்.

ராமுவும் காலி தொட்டியை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றான். எல்லோருடைய தொட்டிகளையும் பார்த்தான். விதவிதமான செடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் உயரத்தில் இருந்தது. இவன் தொட்டியைப் பார்த்த அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

முதலாளி எல்லோரையும் தன்னுடைய அறைக்கு வருமாறு சொன்னார். எல்லோருடைய செடிகளையும் பார்வை இட்டார். ராமு கடைசி வரிசையில் நின்றிருந்தான். அவனை அருகே வருமாறு அழைத்தார்.

ராமு தன்னை வேலையை விட்டு நீக்கத்தான் கூப்பிடுகிறார் என்று பயந்து கொண்டே சென்றான். முதலாளி ராமுவிடம் ''உன் செடி எங்கே?'' என்று கேட்டார். ஒரு வருடமாக அந்த விதையை நட்டு உரமிட்டு தண்ணீர் விட்டதை விலாவாரியாகச் சொன்னான்.

முதலாளி ''ராமுவைத் தவிர அனைவரும் உட்காருங்கள்'' என்றார். பிறகு ராமு தோளில் கையைப் போட்டுக் கொண்டு ''நமது கம்பனியின் நிர்வாகத்தை ஏற்று நடத்தப் போகிறவர் இவர்தான்'' என்றார். ராமுவுக்கு ஒரே அதிர்ச்சி. தன் தொட்டியில் செடி வளரவே இல்லை. பிறகு ஏன் நமக்கு இந்தப் பொறுப்பை கொடுக்கிறார் என்று குழம்பிப் போனான்.

''சென்ற வருடம் நான் உங்களுக்கு ஒரு விதை கொடுத்து வளர்க்கச் சொன்னேன் அல்லவா? அது அனைத்தும் அவிக்கப்பட்ட விதைகள். **(Boiled seeds)** அந்த விதைகள் அவிக்கப்பட்டதால் அது முளைக்க இயலாது. நீங்கள் அனைவரும் நான் கொடுத்த விதை முளைக்காததால் அதற்கு பதில் வேறு ஒரு விதையை நட்டு வளர்த்துக் கொண்டு வந்தீர்கள். ராமு மட்டுமே நேர்மையாக நடந்து கொண்டான். ஆகவே, அவனே என் நிறுவனத்தை நிர்வாகிக்க தகுதியானவன்'' என்றார். நமது சொல், நாம் பயணிக்கும் பாதை நேர்மையாக இருந்தால் வெற்றிகள் நம்மைத் தேடி வரும்...!

வாழ்க்கையில் நேர்மையாக இருக்க முயல்வதும் ஒரு போராட்டம்தான். உண்மையும் நேர்மையும் தர்மத்தை பாதுகாக்கும்; நேர்மை ஒருபோதும் வீண்போகாது; நேர்மையை விதையுங்கள் பதவியும் பணமும் தேடிவரும்.

## எண்ணங்களின் வண்ணங்கள் - 09

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு இறுவட்டுக்கள் (DVD) வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.


### தலைப்பு : மீனவர்கள்

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 ஏப்ரல் 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 07

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்


எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
மினுவாங்கொட, கம்பஹா வலயம்.
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்


## Computer Keyboard – விசைப்பலகை பற்றி அறிந்து கொள்வோம்

### பாடம் 02




விசைப்பலகை கணினியுடன் தொடர்பு கொள்வதற்கு பயன்படுத்தப்படும் மிக முக்கிய தொடர்பு ஊடகமாகும். எழுத்துக்கள், இலக்கங்கள், குறியீடுகள் என்பவற்றை கணினியில் உட்செலுத்துவதற்கும் கணினியினால் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கும் இச்சாவிகள் பயன்படுத்தப்படுகின்றன. விசைப்பலகைகளின் வகைக்கேற்ப இதன் சாவிகளின் அளவுகளிலும் பல்வேறு வித்தியாசங்கள் காணப்படுகின்றன. *82, 101, 104, 108* என சாவிகளின் அளவுகளில் வித்தியாசங்கள் கொண்ட விசைப்பலகைகள் சந்தையில் பெற்றுக் கொள்ளலாம்.

சாவிகளின் வகைகள் ***(Types of Keys)***

- Function Keys
- Numeric keypad
- Alphabetic Keys
- Arrow keys

### ***Function Keys***




F1 – F12 வரை காணப்படும்.

ஒவ்வொரு **Key** யும் பல்வேறுபட்ட விசேட தொழிற்பாடுகளைக் கொண்டது.

F1 Help *(உதவி)*

F2 தெரிவு செய்த Folder ஐ Rename செய்ய உதவும், Ctrl +F2 – Ms Word இல் Print preview ஐக் காட்டும்.

F3 Search Window வை திறக்கும்.

F4 Internet Explorer Address bar ஐ திறக்கும்.

F5 Ms Word இல் Find, Replace, Go to Window ஐ திறக்கும், Internet Browser களை Refresh அல்லது Reload செய்யும்.

F6 Google Chrome, Internet Explorer, Mozilla Firefox என்பவற்றில் Cursor ஐ Address Bar ஐ நோக்கி நகர்த்தும்.

F7 Ms Word இல் எழுத்துப் பிழை மற்றும் இலக்கணப் பிழைகளை இனங்காண உதவும்.

F8 Safe Mode இல் திறக்க உதவும்.

F9 Ms Word இல் Document ஐ Refresh பண்ணும்.


F10 Microsoft Windows இல் திறக்கப்பட்டுள்ள மென்பொருள்களில் Menu bar ஐ Activate செய்யும்.

F11 interner Browser களை Full screen இற்கு மாற்றவும் மீளவும் உதவும்.

F12 Ms Word இல் Save as Window ஐ திறக்கும்.

### ***Numeric keypad***

இலக்கங்களை தட்டச்சிட உதவும்.



*0 - 9* வரையான இலக்கங்களையும் கணித ரீதியான சில குறியீடுகளையும் கொண்டு காணப்படும்.

இங்கு NumLock key யை அழுத்தி numeric keypad ஐ lock பண்ணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்போது இலக்கங்கள் ஏதும் தட்டச்சிடப்பட மாட்டாது.

### Alphabetic Keys


இவை எழுத்துக்களை தட்டச்சிட உதவும்.



A முதல் Z வரையிலான 26 எழுத்துக்களும் இதில் அடங்கும்.

இவை எமக்கு அதிகளவில் பயன்படும் எழுத்துக் களை இலகுவில் Type செய்ய உதவும் முகமாக A,B,C எனும் ஒழுங்கிலன்றி அதிகமான விசைப்பலகைகளில் QWERTY எனும் வித்தியாசமான ஒழுங்கில் அமையப் பெற்றுள்ளன.

### Arrow keys



இதில் 4 Keys உள்ளடங்கும்.

இவை மேல் (up), கீழ் (down), இடம் (left), வலம் (right) என பெயரிடப்பட்டுள்ளன.

இவை cursor ஐ நான்கு பக்கங்களிலும் அசைக்க உதவும்.

### Escape Key




விசைப்பலகையில் சுருக்கமாக Esc என பெயரிடப்பட்டிருக்கும். இது சில மென் பொருள்களிலிருந்து வெளியேற உதவும்.

உதாரணம்: Game Software

### Shift Key




இரண்டு Keys காணப்படுகின்றன.

இதனுடன் இணைத்து Number Keys ஐ அழுத்து வதன் மூலம் number keys இன்மேல் காணப்படும் குறியீடுகளை தட்டச்சிடலாம் அல்லது Caps Lock key off ஆன நிலையில் இக் key உடன் இணைத்து எழுத்துக் களை அழுத்தும்போது எழுத்துக்களை Caps Lock இல் தட்டச்சிடலாம்.

### Tab Key




Tabulator என்பதன் சுருக்கமே Tab ஆகும்.

இது பந்திகளில் ஆரம்பத்தில் சிறு இடைவெளி விட்டு ஆரம்பிக்க உதவும்.


Table இல் இக் key ஐ அழுத்தும்போது அடுத்த column ஐ நோக்கி cursor நகரும்.

### Caps Lock Key

On- off switch போன்றது.

இதனை on செய்து தட்டச்சிடும்போது எல்லா எழுத்துக்களும் capital இல் தட்டச்சிடப்படும்.

### Enter Key




சிலவகை மென்பொருள்களில் Enter Key யை அழுத்தும்போது Cursor அடுத்த வரியின் ஆரம்பத்தை நோக்கி நகரும்.

உதாரணம்: Ms Word

### Space Bar



விசைப்பலகையில் உள்ள நீண்ட Key இதுவாகும்.

சொற்களிற்கிடையே இடைவெளி இட இது உதவும்.

### Ctrl Key




Control என்பதன் சுருக்கமே Ctrl என குறிக்கப்பட்டுள்ளது.

இரண்டு Ctrl காணப்படுகின்றன.

ஏனைய Keys உடன் இணைத்து பயன்படுத்தப்படும்.

### Alt Key




Alternate எனும் சொல் சுருக்கமாக Alt என குறிக்கப்பட்டுள்ளது.

இரண்டு Keys காணப்படுகின்றன.

ஏனைய Keys உடன் இணைத்து பயன்படுத்தப்படும்.

### Backspace Key




இது Cursor ஐ முன்னோக்கி நகர்த்து வதன் மூலம் முன்னால் தட்டச்சிடப் பட்டிருந்த எழுத்துக்கள், இலக்கங்கள் என்பவற்றை அழிக்க உதவும்.

### Print Screen Key




இது Screen இல் காட்சிப்படுத்தப்பட் டுள்ள விடயத்தை பிரதி எடுக்கும்.

### Delete Key




Cursor இற்கு வலப் பக்கத்தில் தட்டச் சிடப்பட்டவற்றை அழிக்க உதவும்.

### Home Key




Screen இல் மேல் பகுதியை நோக்கி Cursor நகரும். அதாவது, ஆரம்ப பகுதியை நோக்கி நகரும்.

### End Key




Screen இல் கீழ்ப் பகுதியை நோக்கி Cursor நகரும்.

### Page down, Page Up







ஒவ்வொரு page ஐயும் கீழ் நோக்கி மேல் நோக்கிச் செல்ல உதவும்.

### Windows Key



Windows Start Menu வை திறக்க உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்ததை அடையும் வரை...

ஜே.எம். அஸீம் ( நளீமி )



**வாழ்வில் வெற்றி பெற வேண்டிய தருணங்களை எல்லாம் தொலைத்து விடுபவர்கள் இழந்ததைப் பற்றிக் கவலைப்படுபவர்களே! வெற்றி வெற்றி என்று நினைப்பவர்களையே வெற்றி வந்தடைகிறது. தோல்வி என்ற நினைப்பில் இருப்பவர்களை தோல்வி வெற்றி கொண்டுவிடுகிறது.**

ஜப்பானியர்களின் வெற்றிக்குக் காரணம் இந்தப் பழக்கம்தான். அவர்கள் நினைத்ததை அடையும் வரை தொடர்ந்து அயராமல் முயற்சி செய்து கொண்டிருப்பர். அயராத முயற்சியின் அறுவடையைத்தான் உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

தோல்வி

பலரும் ஆரம்பத்தில் உற்சாகமாகவே காரியத்தில் இறங்குவர். மனம் அதில் திளைத்திருக்கும். நம்பிக்கை மிகுந்திருக்கும். ஆரம்பத்தில் ஆர்ப்பரித்த உற்சாகமும் நம்பிக்கையும் நாளாக நாளாக தளர்வடைவது பலருக்கு இயல்பானது. ஆனால், தினமும் தமது உற்சாக த்தைப் புதுப்பிப்பவர்களே வெற்றி பெறுகின்றனர். இதைவிட முக்கியமான விடயம் இவையெல்லாம் தாண்டிப் பயணித்தாலும் தோல்வி அவர்களை வென்று விடுகிறது.

சிகாகோவின் பிரபலமான இடமான ஸ்டேட் ஸ்டிரீட்டில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. வர்த்தக நிலையங்கள் யாவும் முற்று முழுதாக தீக்கிரையாகி விட்டன. தீயில் எரிந்த தம் வர்த்தக நிலையங்களின் முன் நின்று கதிகலங்கி கண்ணீர் விட்டவர்களாக கவலையோடிருந்தனர் வியாபாரிகள்.

சிகாகோவே வேண்டாம், வியாபாரமே வேண்டாம் என்று எதிர்காலத்தை மூட்டை கட்டிவிட்டனர் பலர். அப்போது ஒருவர் சொன்னார், ''எத்தனை தடவை எரிந்தாலும் பரவாயில்லை; எரிந்த இந்த இடத்திலேயே எனது வியாபார நிலையத்தை மீண்டும் மீண்டும் நிர்மாணிப்பேன்.''

அவர் முயற்சி வீண் போகவில்லை. நினைத்ததை அடையும் வரை அயராத முயற்சிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெற்றி கிடைத்தது. இன்றும் அது சிகாகோவில் தலைநிமிர்ந்து நிற்கிறது. பீனிக்ஸ் பறவையாய் உயிர்த்தெழுந்த மார்ஷல் பீல்ட் இன் வெற்றிக் கதைதான் இது.

நினைத்ததை அடைவதில் அனைவரும் தவறும் இடம் அல்லது தோல்வியை ஏற்கும் இடம்தான் அது. அந்த இடத்தை தாண்டுபவர்கள்தான் நினைத்ததை சாதிக்கிறார்கள். இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், ஒன்று சாத்தியமாவதற்கு சில நியமங்கள் இருக்கின்றன. அவை அடையப்படுகின்றபோது வெற்றி சாத்தியமாகும்.

ஓர் இடத்தில் பத்து அடி ஆழம் தோண்டினால் தங்கம் கிடைக்கும் என்று கேள்விப்பட்ட ஒருவர் பாறைகளைக் குடைந்து தோண்டும் கருவிகளை வாடகைக்கு எடுத்து 9 அடி தோண்டிவிட்டார். தங்கம் கிடைப்பதற்கு எந்த அறிகுறியும் தென்படவில்லை. இதிலாவது தங்கம் இருப்பதாவது. தண்ணீர் கூட இருக்காது என்று முயற்சியைக் கைவிட்டு விட்டு அக்கருவிகளை உரியவரிடம் ஒப்படைத்து விட்டார்.

பின்னர், கருவிகளை கொடுத்தவர், தங்கம் தோண்டும் விடயத்தைக் கேள்விப்பட்டு 9 அடிகள் தோண்டிய இடத்தில் முயற்சி செய்கிறார். பத்தாவது அடி தாண்டியதும் தங்கம் ஜொலிக்கிறது.

முதலாமவர் நகர மறுத்த எல்லைதான் வெற்றியின் எல்லை. இது கற்பனை அல்ல, நிஜக்கதை. இப்படித்தான் பல தங்க வெற்றிகளை நாம் கோட்டை விட்டிருப்போம். நினைத்ததை அடையும் வரை முயற்சி செய்யும் பழக்கம் வெற்றிக்கு உதவும்.

**இழந்ததல்ல- எஞ்சியிருப்பதுதான் முக்கியம்**

வாழ்வில் பலருக்கு முழு யோசனையும் தாம் இழந்தது பற்றியே இருக்கும். இழந்ததை நினைத்து வருந்துவதால் ஆகும் பயன்தான் என்ன? இழந்த பின் எஞ்சியிருப்பவையே உங்களுக்குரியவை. அவற்றைப் பற்றி கவனம் செலுத்துங்கள். அப்போதுதான் யாரும் நினைக்காத உயரங்களை உங்களால் தொட முடியும்.

ஒரு மனிதனின் நம்பிக்கைக்கு அவனது பலவீனத்தையே வெற்றி கொள்ளும் சக்தி உண்டு. ''ஒரு மனிதனின் பலவீனம்தான் பெரும்பாலும் அவனது பெரும் பலமாகி விடுகிறது'' என்றார் எமர்சன்.

வாழ்வில் வெற்றி பெற வேண்டிய தருணங்களை எல்லாம் தொலைத்து விடுபவர்கள் இழந்ததைப் பற்றிக் கவலைப்படுபவர்களே! வெற்றி வெற்றி என்று நினைப்பவர்களையே வெற்றி வந்தடைகிறது. தோல்வி என்ற நினைப்பில் இருப்பவர்களை தோல்வி வெற்றி கொண்டுவிடுகிறது.

நோய் உடலுக்குத்தான் தடை; மனதிற்கல்ல. கால் ஊனம் காலுக்குத்தான் தடை; மனதிற்கல்ல என்பதை மனதில் நன்கு பதிந்து கொள்ளுங்கள். ''பொறுமையும் மனோதிடமும் எல்லாவற்றையும் வெற்றி கொள்ளும்'' என்றார் எமர்சன். உங்கள் வெற்றியையும் தோல்வியையும் தீர்மானிப்பவர் நீங்களே! அயராது முயற்சி செய்யுங்கள்; வெற்றி பெற வாழ்த்துக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் ஸ்போர்ட்ஸ்




விரைவு - உயர்வு - துணிவு

எம்.ஏ. ரியாஸ் மொஹமட் (B.A, PGDE)
கு/இப்/அல் ஹுதா மு.ம.வி, ரிதீகம

## இறுதிச் சுற்றும் ஆண்டுகளும்

| ஆண்டு | நடைப்பெற்ற இடம் | வெற்றி பெற்ற அணி |
|---|---|---|
| 1984 | ஷார்ஜா | இந்தியா |
| 1986 | இலங்கை | இலங்கை |
| 1988 | பங்களாதேஷ் | இந்தியா |
| 1990 | இந்தியா | இந்தியா |
| 1995 | ஷார்ஜா | இந்தியா |
| 1997 | இலங்கை | இலங்கை |
| 2000 | பங்களாதேஷ் | பாகிஸ்தான் |
| 2004 | இலங்கை | இலங்கை |
| 2008 | பாகிஸ்தான் | இலங்கை |
| 2010 | இலங்கை | இந்தியா |
| 2012 | பங்களாதேஷ் | பாகிஸ்தான் |
| 2014 | பங்களாதேஷ் | இலங்கை |
| 2016 | இந்தியா | இந்தியா |

## T20 பரிசுத் தொகை எத்தனை கோடி தெரியுமா?




- வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு ரூபாய் 24,000 கோடி பரிசுத் தொகை காத்திருக்கிறது.
- இது கடந்த தொடரை விட 5.70 கோடி ரூபாய் அதிகமாகும்.
- இறுதிப் போட்டியில் தோல்வியடையும் அணிக்கு ரூபாய் 10.3 கோடியும் அரையிறுதிக்கு முன்னேறும் அணிக்கு ரூபாய் 5.14 கோடியும் பரிசுத் தொகையாக கிடைக்கும்.

## ஆசியாக் கிண்ணம் ஒரு பார்வை

micromax
Asia Cup T20
BANGLADESH 2016

- கிரிக்கெட் வரலாற்றில் ஆசியக் கிண்ண தொடர் 1983 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதுவரையில் 13 முறை ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றுள்ளன.
- இதில் இந்திய அணி 6 தடவைகளும் இலங்கை அணி 5 தடவைகளும் பாகிஸ்தான் அணி 2 தடவைகளும் சாம்பியனாக தெரிவாகியுள்ளன.
- இதுவரை 50 ஓவர்களைக் கொண்டு நடந்த போட்டிகள் இம்முறையே முதலாவதாக 20 ஓவர்களைக் கொண்ட போட்டிகளாக நடைபெற்றன.
- இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் இறுதி சுற்றுக்கு தெரிவாகி, இந்தியா இவ்வருட சாம்பியனாக வெற்றிவாகை சூடியது.

## டெனிஸ்



- டெனிஸ் விளையாட்டின் தாயகம் - இங்கிலாந்து
- பந்தின் விட்டம் - 6.35-6.67 செ.மீ
- பந்தின் எடை - 56.7-58.5 கிராம்
- ரொக்கட்டின் அதிகபட்ச நீளம்-32
- ரொக்கட்டின் அதிகபட்ச அகலம்-12.5
- ஒற்றையர் ஆடுகளம்-78 x 27
- இரட்டையர் ஆடுகளம்-78 x 36
- வலையின் உயரம் (போஸ்டில்) -1.07 மீ
- வலையின் உயரம் (நடுவில்) - 0.91மீ
- டெனிஸ் உலக கோப்பை நடைபெறும் இடம் - விம்பிள்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## T20 ஒரு சுருக்கப் பார்வை

T20 ICC WORLD TWENTY20 INDIA 2016

- இது 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
- இக்கிரிக்கெட் போட்டி ஐ.சி.சி. சர்வதேச கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வருகிறது.
- கூடியளவு ஓட்டங்கள் பெற்ற வீரர்
  - மஹேல ஜயவர்தன 858 ஓட்டங்கள்.
- கூடியளவு விக்கட்களைப் பெற்றவர்
  - லசித் மாலிங்க 33 விக்கட்கள்.
- இன்னிங்ஸ் ஒன்றில் கூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரர் பி. மெக்கலம் ஆவர்.
- இப்போட்டிகள் இரு வருடங்களுக்கு ஒரு முறையே நடைபெறுகிறது. 2007 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இறுதிச் சுற்றில் மோதின. இதில் இந்திய அணி வெற்றி பெற்றது.
- 2009 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டித் தொடரில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் இறுதிச் சுற்றில் களமிறங்கின. இதில் பாகிஸ்தான் அணி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.
- 2010 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்ரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் இங்கிலாந்து அணி சாம்பியனாக தெரிவானது.
- 2012 ஆம் ஆண்டு இலங்கை மற்றும் மேற்கிந்திய அணிகள் இறுதிச் சுற்றுக்கு தெரிவாகின. இதில் மேற்கிந்திய அணி வெற்றி பெற்றது. இப்போட்டி இலங்கை மண்ணிலே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.
- 2014 ஆம் ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்ற போட்டியில் இலங்கைமற்றும் இந்தியாஅணிகள் இறுதிச் சுற்றில் களமிறங்கின. இதில் இலங்கை அணி வெற்றி பெற்றது.
- 2016 இன் தொடர் தற்போது இந்தியாவில் நடைபெற்றது.
- 2020 அவுஸ்திரேலியாவில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 2016 T20 ஒரு பார்வை




- T 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் உள்ள முக்கிய 8 இடங்களில் நடைபெற்றது.
- சூப்பர் 10 போட்டிகளில் பங்கேற்ற அணிகளிலிருந்து சிறந்த நான்கு அணிகள் அரை இறுதி சுற்றுக்கு முன்னேறியது.
- இந்நிலையில் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் அணிகள் ஏப்ரல் 03 ஆம் திகதி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் மோதின.

## T20 இலங்கை அணியின் சாதனைகள்



- 2014 மார்ச்சில் பங்களாதேஷில் நடைபெற்ற T20 போட்டியில் இலங்கை அணி நெதர்லாந்து அணிக்கு எதிராக சாதனையை பதிவு செய்தது.
- இலங்கை அணி நெதர்லாந்து அணியை மிகக் குறைந்த மொத்த எண்ணிக்கையான 39 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்து எதிரணி ஒன்றை குறைந்த எண்ணிக்கைக்கு ஆட்டமிழக்க செய்த சாதனையை நிலை நாட்டியது.

## ஒளிரும் ஸ்டம்புக்கள்

- T20 கிரிக்கெட் போட்டியின் முதன் முதலாக ஒளிரும் ஸ்டம்புக்கள் 2014 ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டன.
- ஒளிரும் ஸ்டம்ஸ் தொழில்நுட்பம் சர்ச்சைக்குரிய ஆட்டமிழப்புக்களுக்கு தீர்வு காண வசதியளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்

# மழை நீரல்லவே நாம்...

வனாந்தரத்தில் வசந்தம் கண்டு
ருத்ரம் மேல் ருசி கண்டு
செருப்பில்லாப் பாதுகையும்
சேற்றுக் கிடங்குகளும்

கரம் நிறையக் குச்சிகளும்
பரட்டை முடியுடன்
பதுங்கு குழிகளுக்குள்
புதைந்து கிடக்கையில்...

சிந்திய சிரிப்பொலிகள்
வடித்த கண்ணீர் துளிகள்
வளர்த்த வண்ணத்துப்பூச்சி
வழுக்கிய மலை மேடுகள்...

கரைந்து போகும் கடதாசிப் பந்துகளும்
கிளறிவிடும் கிண்டல் வார்த்தைகளும்
ஓடிச் செல்லும் ஓடையினில்
சங்கமிக்கும் சகபாடிகளும்...

இவை நினைவுகளாய் மட்டும்
மாறிவிட்ட நிதர்சனங்கள்
மழை நீரல்லவே நாம்...
வடிவம் மாற்றி மீண்டும் நீராகவே உருவாக
மரங்களே நாம்...
மீண்டும் மரமாக முடியுமா?
உதிர்ந்து உரமாகத்தானே முடியும்...

அகீலா அஸ்வர்
இஸ்லாஹிய்யா வளாகம்

---

# அந்த நாட்கள்



என் தாயுடன் கைகோர்த்து
நடந்த நாட்கள்
தப்பு செய்துவிட்டு தந்தையிடம்
திட்டு வாங்கும் நாட்கள்

தங்கையுடன் சண்டை பிடிக்கும்
நாட்கள்
தம்பியை மிரட்டும் அந்நினைவுகள்
அத்தனையும் கானல் நீராய்
போனதம்மா...

பள்ளிப் பருவத்திலே என் நண்பனுடன்
சேர்ந்து விளையாடும் நாட்கள்
நண்பர்களுக்கென எதையும்
செய்யும் துணிச்சல்
அத்தனையும் மறவேன்...

வழிந்தோடும் கண்ணீர் துளிகள்
வற்றாத கங்கை நதிபோல்
துடைப்பதற்கு மறுக்கும்
என் கைகள்...

ஏனென்றால்...
தனிமையில் கிடக்கும்
எனக்கு அதுவே ஆறுதல்...!

முஹம்மட் ரிஸ்வான்
கு/பறகஹ தெனிய தே.பா.

## பேசும் கவிதை - இல 12



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த பத்து கவிதைகளுக்கு பரிசாக பெறுமதியான புத்தகங்கள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 ஏப்ரல் 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுக்குரிய ஏனைய கவிதைகள்



### முதலிடம் பெற்ற கவிதை

## அல்ஹம்துலில்லாஹ்

பாலைவனம் தாண்டி
பால்நிலம் அடைந்தேன்
நா வரண்டது
மனம் தளர்ந்தது
நீரை கண்டது கண்
உள்ளம் மொழிந்தது
அல்ஹம்துலில்லாஹ்

**அஸ்மா மஸாஹிம்**
**அல் பஹ்ரியா ம.க**
**தொட்டவத்த**
**பாணந்துறை**

## அருட்கொடை நீர்

பாருக்குள் ஓடிடும் நீர்
பற்பல பிணி நீக்கும் நீர்
காருக்குள் மிதந்திடும் நீர்
கருணையாளனின்
அருட்கொடை நீர்
ஊனுக்குள் நிறைந்திடும் நீர்
உதிரத்தில் செறிந்திடும் நீர்
அல்லாஹ் எமக்களித்த
உன்னத அருட்கொடை நீர்

**ஆர் .எம்.அஸ்ரித்**
**பொ.அல் அஸ்ஹர ம.வி**
**கல்லளை**

## திகட்டாத பானம்

தாகமொன்று எனை நெருங்க
பல வகை பானமிருந்து
என்ன! அது
பரிசுத்த நீருக்கு நிகராகுமா?
இத்தனை வருடத்தில்
எப்போதாவது திகட்டியதாக
என் உதடுகள் நவின்றதுண்டோ?

**பர்ஹான்**
**சிறாஜியா அ.க**
**ஓட்டமாவடி**

## நீலத்தங்கம்

நீலத்தங்கமே
நீ பேரலையாய் வந்ததால்
இவ்வுலகம் மடிந்தது
நீ எமக்கு சிறு துளிகூட
இல்லாவிட்டால்
இவ்வுலகத்தைவிட்டு
நாமே மடிந்து விடுவோம்
நீயில்லாமல் நாம் வாழ்வது
எப்படி?

**பாத்திமா நுஹா அன்சார்**
**கு/அல்-ஹுதா மு.ம.வி**
**ரமுக்கந்தன**
**ரித்கம**

## இறைவரம்

இறையோனைப் போற்றி
இருகரம் ஏந்தி
இறைவரமாக வரும்
இந்நீரை இறையருளால்
பாதுகாப்போம்

**ல.மு .மிப்தாஸ்**
**நத்வதுல் உலமா அ.க**
**மூதூர்**

## விண் விரயம்

விண்ணாளும் ஏகனின்
விந்தைகளில் ஒன்றாய்
விண் மேகத்திலிருந்து
வீழ்ந்திடும் நீரினை சேமித்திடு
உன் வீட்டு சூழலில்
விரயமாகும் நீரினை
வினைத்திறனுடன் தவிர்ந்திடு - அதுவே
சிறு துளி பெருவெள்ளமாய் மாறும்

**ஏ.எல்.எம் நபீல்**
**சிறாஜியா அ.க**

## நிகழ்கால நிதர்சனம்

இரு கரம் ஏந்தி தாகம் தணிக்கும்
இச்சிறுவனின் விரல்விட்டு வழியும்
நீர் பருக வழியின்றி
தினம்தினம் மாயும்
உயிர்கள்தான எத்தனை?

**எப்.சஸ்னா**
**பாணந்துறை**

## நீரும் உனக்கு அமுதம்தான்

பசியின் கொடுமை
உணர்ந்த உள்ளத்துக்கு
நீரும் தேன்தான்
மூவேளை உணவின்றி
வாழ்ந்தாலும்
ஒருவேளை உணவின்றி
வாழாது எம் உடல்
வீண்விரயம் இன்றி
நீரின் நலம்
பேணினால்
பல தலைமுறைகள் வாழும்
தாகமின்றி...

**எப். ஹசீனா**
**பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க**
**ஓட்டமாவடி**

## தாகம்

உருண்டோடிய காலமதில்
மனிதா நீ விட்ட தவறு
பூமியை வளப்படுத்த
தவறியதேனோ!
உன் கடமையை மறந்ததேனோ
குடிப்பதற்கோ நீரில்லாது
தத்தளிக்கும் மனிதமே
உம்மை காண்கையில்
எம் கரங்கள் அவனை
நோக்கி உயர்கிறது

**எப். ஹுஸ்னா**
**இஸ்லாஹியா பெ.அ.க**
**புத்தளம்**

## திரும்பும் திசையெல்லாம்

தலையசைக்கும்
திசையெல்லாம்
நீரெனும் கோஷம்தான்
மண் வளத்திற்கும்
தாவர வளர்ச்சிக்கும்
விவசாய செழிப்பிற்கும்
எத்தனை எத்தனை பயன்கள்
அத்தனையும் நீரிலே
இத்தனைக்குமாகவே
எத்திசையெங்கும்
ஒலிக்கிறது நீரின் ஓசை

**எப். அமீறா**
**ஓட்டமாவடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த இதழ் தொடர்...

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology (Peradeniya)

# போதையும் மாணவர்களின் பாதையும்...?

கடந்த இதழில் புகைத்தல் மற்றும் அதனால் ஏற்படும் மோசமான விளைவுகள் தொடர்பாக கலந்துரையாடினோம். இந்த இதழில் மூன்றாம் நிலைப் புகைத்தல் மற்றும் அதன் பாதிப்புகள் பற்றியும் மாணவர்களை இம்மோசமான புகைப் பழக்கத்தின் பக்கம் தூண்டும் காரணிகள் என்ன, அவற்றில் விழுந்துவிடாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் விழுந்தவர்கள் இலகுவாக வெளியேறுவதற்குமான வழிமுறைகள் பற்றியும் நோக்குவோம்.

**மூன்றாம் நிலைப் புகைத்தல் என்றால் என்ன?**

ஒருவர் புகைக்கும்போது அண்ணளவாக 25% புகையை உள்ளெடுக்கிறார். இது முதலாம் நிலைப் புகைத்தல் எனப்படும். அவர் வெளியிடும் புகையில் அவர் ஏற்கனவே உள்ளெடுத்த 25% புகையில் அரைவாசியும் சேர்ந்து அண்ணளவாக 85% புகை வெளியிலே காற்றுடன் கலந்து விடுகிறது. இதனைப் புகை பிடிக்காமல் அந்த இடத்தில் இருப்பவர்கள் உட்சுவாசிக்கும் நிலை காணப்படுகிறது. இது இரண்டாம் நிலை புகைத்தல் எனப்படும். மூன்றாம் நிலைப் புகைத்தல் என்பது புகை பிடிக்கும் போது வெளிப்படும் மீதமான நுண்துகள்கள் வீடு, அலுவலகம், வாகனங்களிலுள்ள கதவு மற்றும் ஜன்னல் திரைகள், அலுமாரிகள், தரை விரிப்புகள், சுவர்கள் போன்றவற்றில் படிந்து பின்னர் காற்றுடன் கலந்து சுவாசப் பாதைக்குள் செல்வதாகும்.

இது சிறு பிள்ளைகளை அதிகம் பாதிக்கின்றது. புகையிலையை எரிக்கும்போது நீராவி வடிவில் விடுவிக்கப்படும் நிக்கொட்டினானது தரை, சுவர், விரிப்பு, தளபாடங்களினால் இலகுவாக உறிஞ்சப்படுகிறது. இவ்வாறு உறிஞ்சப்படும் நிக்கொட்டின் பதார்த்தமானது ஒரு நாள், ஒரு கிழமை அல்லது ஒரு மாத காலத்துக்கும் தொடர்ச்சியாக குறிப்பிட்ட இடத்தில் படிந்திருக்கும். இப்படிவானது வளியில் உள்ள நைத்திரிக் அமிலத்துடன் தாக்கம் புரிந்து வீட்டின் உட்பகுதியில் மாசை ஏற்படுத்துகிறது. இது புற்று நோய்க்கு வழிவகுக்கிறது.

தரைக்கு அண்மித்து சுவாசிக்கக் கூடியவர்கள் சின்னஞ் சிறுவர்களே (உதாரணம்: தவழும் சிறுவர்கள்) என்பதால் அவர்களே இதன் மூலம் அதிகம் பாதிக்கப்படக் கூடியர்களாக இருக்கின்றனர். எப்படியோ நிக்கொட்டினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் இம்மூன்றாம் நிலைப் புகைத்தலாலும் ஏற்படுகின்றன.

வாகனமாக இருந்தாலும் சரி, வீடு, அலுவலகம், ஹோட்டல்கள் எதுவானாலும் சரி அங்கு புகைத்தல் இடம்பெறுமாயின் 'உடனே இல்லை' என்றாலும் தாமதமாக பிறரைப் பாதிக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. எனவே, நாம் புகைத்தலை விட்டு எல்லா வகையிலும் தூரமாக இருப்பது எமது ஆரோக்கியத்துக்கு மிகவும் பாதுகாப்பாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புகைத்தலைத் தூண்டும் காரணிகள்

**1. சினிமா, சின்னத்திரை நாடகங்கள்**

சினிமாப் படங்களைத் தயாரிப்பவர்களுக்குப் பெருந் தொகையான பணம் தேவைப்படும் அதேவேளை, புகையிலைக் கம்பனிகளுக்கும் தங்களுடைய உற்பத் தியை விளம்பரப்படுத்தும் பாரிய தேவையும் ஏற்படு கிறது. எனவே, சினிமாத் தயாரிப்பாளர்கள் புகையிலைக் கம்பனிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களுடைய விளம்பரங்களை தமது ஹீரோக்கள் மூலமாக காட்சிப்படுத்துகின்றனர். இந்த ஹீரோக்களை தமது சொந்த ஹீரோக்களாக எடுத்துக் கொள்ளும் இளம் சிறார்கள் தமது ஹீரோக்கள்போல தாமும் செயற் பட முற்பட்டு புகைப் பழக்கத்துக்கு அடிமையாகி விடு கின்றனர். பல கோடி ரூபாக்களைப் பெற்று சில செக் கனில் புகைப்பதுபோல் நடிக்கும் ஹீரோக்களைப் பார்த்து உண்மை என நம்பும் சிறுவர்கள் புகைக்கப் பழகி பல ரூபாக்களையும் மானம், மரியாதை, கல்வி, சமூக அந்தஸ்து போன்றவற்றை இழப்பதுதான் பரி தாபமாகும்.

**2. கார்ட்டூன் காட்சிகள் மற்றும் திட்டமிட்ட விளம்பரங்கள்**

இலங்கையைப் பொறுத்தவரை சிகரட் புகைப்ப தால் ஒரு நாளைக்கு 70 பேர் வரை மரணிக்கின்றனர். இதனால் புகையிலைக் கம்பனிக்கு 70 வாடிக்கையா ளர்களை இழக்க வேண்டி ஏற்படுகிறது. இந்த வெற் றிடத்தை நிரப்ப நாளாந்தம் 70 பேரை புதிதாக உரு வாக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. இதனால் சிறு வர்களை மையப்படுத்தி தமது சிகரட் விளம்பரங்க ளைத் திட்டமிட்டு மேற்கொள்கின்றனர். இதற்காக கார்ட்டூன் திரைப்படங்கள் மற்றும் நாடகங்களை அவர் கள் பயன்படுத்துகின்றனர். கார்ட்டூன் காட்சிகளைப் பார்க்கும் சிறுவர்கள் தாமறியாமலே புகைப் பழக்கத் துக்கு ஆளாகின்றனர். இலங்கையில் புகைப்பதற்கு ஆரம்பிக்கும் வயதாக 14 வயது கணிப்பிடப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது. அதற்கு முன்னரும் புகைக்க ஆரம்பிக்கும் மாணவர்களும் உள்ளனர்.

**3. பெற்றோர் மற்றும் சூழலிலுள்ள பெரியவர்கள்**

பெற்றோர் புகைப்பதைப் பார்க்கும் சிறு பிள்ளை கள் தாங்களும் புகைப்பதற்குத் தூண்டப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் பரீட் சித்துப் பார்ப்பதற்கென்று ஆரம்பிக்கும் இவர்கள், பின் னர் தொடர்ந்தும் பயன்படுத்தப் பழகி விடுகின்றனர்.

**4. நண்பர்கள்**

புகைக்கப் பழகிய நண்பர்களுடன் நேரத்தைக் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் மாணவர்கள் அவர்களைப் பார்த்தும் அவர்களுடைய நிர்ப்பந்தம் காரணமாகவும் புகைக்கப் பழகி விடுகின்றனர். புகைக்கா விட்டால் நண்பர்களின் சகவாசம் அற்றுப் போய்விடும் என்பதற்காகவே புகைப் பழக்கத்தை ஆரம்பிக்கத் தூண்டப்படுகின்றனர்.

**5. புகைப்பதை நாகரிகமாகக் கருதுதல்**

புகை பிடிப்பது ஒரு நல்ல கலாசாரமாக, ஆளுமை யாக நம்புதலும் புகைப் பழக்கத்தை ஆரம்பிக்க கார ணமாக அமைகிறது.

**6. புகைத்தல் மகிழ்ச்சியைத் தருகிறது என்ற நோக்கில் புகைத்தல்**

கேளிக்கையாக இருத்தல், தனிமையிலிருந்து விடு படுதல், கவலையைப் போக்குதல் போன்ற இன்னும் சில சிறு சிறு ஆதாரமற்ற நம்பிக்கைகளுக்காகவும் புகைத்தலை ஆரம்பிக்கும் மாணவர்களும் உள்ளனர்.

### புகைத்தல் மற்றும் அதன் பாதிப்புகளிலிருந்தும் எவ்வாறு விடுபடலாம்.

நீங்கள் புகைப்பவராயின்,

1. இஸ்லாத்தின் பார்வையில் புகைத்தல் என்பது ஹரா மான ஓர் அம்சம் என்பதை அறிவுபூர்வமாக ஏற்று, நம்ப வேண்டும்.
2. புகைத்தலை முற்று முழுதாக விட்டு விலக வேண் டும் எனும் ஆசையை உள்ளத்தில் பதியச் செய்தல்.
3. இதற்கு அல்லாஹ்வின் உதவியை பிரார்த்தனை மூலம் கேளுங்கள்.
4. இது விடயத்தில் உங்களுக்கு நெருக்கமான, நம்பிக் கைக்குப் பாத்திரமான, உங்களை விட வயதில் மூத்த ஒருவருடன் இது தொடர்பில் கலந்துரையாடி அவ ரின் உதவியையும் ஒத்தாசையையும் பெற்றுக் கொள் ளுங்கள்.
5. புகைத்தலுக்குத் தூண்டும் காரணிகளிலிருந்து வில கிக் கொள்ள முயற்சி எடுங்கள்.
6. புகை பிடிப்பதை படிப்படியாகவோ அல்லது முற்று முழுவதுமாகவோ விடுவதற்குரிய தைரியத்தை வர வழைத்துக் கொண்டு விட்டுவிடும் முயற்சியில் ஈடு படுங்கள்.
7. புகைப்பதில் இருப்பதாகக் கருதப்படும் சிற்றின் பம் எனும் மாயையை விட அதனால் ஏற்படும் பேரி ழப்புக்களை எண்ணிப் பாருங்கள்.
8. புகைத்தலை விட்டுவிடுவதால் ஏற்படும் நன்மை களையும் நல்ல விளைவுகளையும் அடிக்கடி சிந்தி யுங்கள்.
9. மீண்டும் புகைப்பதற்கான சந்தர்ப்பங்களும் அதற் கான எண்ணமும் ஏற்படுமாயின் அது பற்றி நீங்கள் தெரிவு செய்த, வயதில் மூத்த நபரிடம் தெரிவித்து அவருடைய உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில்,எம்.எம். முபாரக்

1. சகுந்தலா திருமண வீட்டிற்கு தளபாடங்கள் வாங்க கடைக்குச் சென்றாள். அவள் வாங்கிய பொருட்கள் யாவை?
   i. காப்பு, மாலை
   ii. கதிரை, கட்டில்
   iii. புடைவை, சட்டை
2. ஒருத்தி களியை பதப்படுத்த ஒருவன் பானை வனைந்தான். அங்கு தொழிலில் ஈடுபட்டவர்கள் யாவர்?
   i. நடிகன், நடிகை
   ii. குயத்தி, குயவன்
   iii. நிபுணை, நிபுணன்
3. தாதி சுயநலம் கருதாது பணியில் ஈடுபட்டாள். அவள் பணிபுரிந்த இடம் எது?
   i. கம்மாலையில்
   ii. தேவாலயத்தில்
   iii. வைத்தியசாலையில்
4. காற்றிலே வேகம் கூடியதொன்று?
   i. வளி
   ii. தென்றல்
   iii. புயற்காற்று
5. கூவும்; முட்டையிடவும் செய்யும் பறவை?
   i. சேவல்     ii. பருந்து
   iii. குயில்

**பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**

அடி, படி, கடி என நீ பயின்றாய்
பண்புகள் பலதனை நீ வளர்த்தாய்
வாழ்வினை ஜெயித்திட நீ எழுந்தாய்
பாரினில் உயர்ந்திட நீ விரைந்தாய்

பாடலில் இடம்பெற்ற பெயராகவும் வினையாகவும் வரக் கூடிய இரு சொற்கள்?

6. ........................
7. ........................
8. பாடலில் இடம்பெற்ற முன்னிலைச் சொல்?
9. விரைந்தாய் என்பது?
   i. நிகழ்காலம்
   ii. இறந்தகாலம்
   iii. எதிர்காலம்
10. வென்றிட என்பதற்கு பாடலில் இடம்பெற்ற அதே கருத்துச் சொல்?

**பின்வரும் சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.**

பொம்மை, அம்மை, செம்மை, இம்மை, கருமை

11. பூபாலன் தனது வாழ்வை ................யானதாக ஆக்கிக் கொண்டான்.
12. ........... யான குயில் இனிமையாக பாடியது.
13. மக்கள் .............. வாழ்வை பல வழிகளில் அனுபவிக்கின்றனர்.
14. ........... நோயினால் சிறுவன் அவதியுற்றான்.
15. குழந்தைகள் ............ வைத்து விளையாடினர்.

**ஆங்கில சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

16. DOOR :...................................
17. WINDOW :...................................

**படத்திற்கு பொருத்தமான சொல்லை தெரிக.**

18.  பன்னீர், தண்ணீர், கண்ணீர்
19.  படகு, பலூன், முச்சக்கரவண்டி
20.  சிலை, கொப்பி, பாதை
21.  கண், விரல், பாதம்

**சரியான விடைக்குக் கோடிடுக.**

22. பல (களை, கலை) களை பயின்ற மாமா வயலில் 23. (களை, கலை) களை பிடுங்கினார்.
24. (கறை, கரை) படிந்த ஆடையை தாய் குளக் 25. (கறை, கரை)யில் வைத்து கழுவினால்.

**வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

26. EIL    FJM    GKN
    i. HLO    ii. HOL    iii. IKS




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. தொடர்பை அவதானித்து இடைவெளிக்கு வர வேண்டிய எண்களை தெரிவு செய்க.

i. 23, 35, 39 ii. 21, 25, 40

iii. 22, 29, 40

28. 


i. 13, 12

ii. 14, 15

iii. 16, 18


29. கழிக்குக. 2/3 - 1/4 = .........

கூட்டுக. 3/2 + 1/4 = .........

30. ரூபா 4.75 விலையுள்ள அப்பியாச கொப்பியில் 7 ஐ வாங்கி ரூபா 500 தாள் காசு ஒன்றை கொடுத்தால் கிடைக்கும் மிகுதிப் பணம்?

31. அட்டவணையை பூர்த்தி செய்க.

| கனவளவு | தற்போது உள்ள நீர் | முற்றாக நிரப்புவதற்கு தேவையான அளவு |
|---|---|---|
| 10 லீற்றர் | ................... | 3 லீற்றர் 375 மில்லி லீற்றர் |
| ............... | 7 லீற்றர் 700 மில்லி லீற்றர் | 6 லீற்றர் 600 மில்லி லீற்றர் |

32. 

இவ்வுருவில் எத்தனை சிறிய முக்கோணங்கள் வெட்டி எடுக்கலாம்?

33. உரோம எண் குறியில் எழுதுக.

19 : ......... 9 : ......... 14 : .........

34. குறிப்பிட்ட எண்களைப் பயன்படுத்தி 8 இன் மடங்குகளை அட்டவணையில் ஒழுங்கு முறையில் எழுதுக.

72 66 96 = ......... = .........

68 82 80 = ......... = .........

88 70 98

35. 1, 3, 5, 7, 9, 2, 4, 6, 8, 12, 15, 17, 19, 21 இங்கு அதிகமாக இருப்பவை எவை?

i. ஒற்றை எண்கள்

ii. இரட்டை எண்கள்

iii. சதுர எண்கள்

36. 10 இன் பத்து மடங்குடன் 50 ஐக் கூட்டினால் கிடைக்கும் விடை?

i. 120

ii. 150

iii. 250

37. சரியான கோவையை தெரிவு செய்க.

i. 100 + 175 + 125 + 50 = 580

ii. 165 + 135 + 145 = 445

iii. 165 + 125 + 165 = 445

38. பிழையான கோவையை தெரிவு செய்க.

i. 10 x 10 + 50 = 150

ii. 05 x 00 x 50 = 50

iii. 15 = 15 - 15 = 15


**எண் குறியீட்டில் எழுதுக.**

39. நூற்று இருபதாயிரத்து நூறு

40. இருபதாயிரத்து இருநூறு

41. 1500 மில்லி லீற்றர் பாலின் விலை ரூபா 90 எனின், 100 மில்லி லீற்றர் பாலின் விலை யாது?

42. 1.5 கிலோ கிராம் எத்தனை கிராம்?

43. 

தரப்பட்ட திண்மப் பொருளில் காணக் கூடிய விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

44. ஒரு தொகைப் பணத்தின் 1/4 பங்கு ரூபா 60 எனின், இரண்டு பங்கின் பணம் எவ்வளவு?

45. 12 சென்றி மீற்றர் நீளம் 8 சென்றி மீற்றர் அகலமும் ஒரு பக்கம் கொண்ட செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க.

46. 2016 ஆம் ஆண்டு உரித்தாவது?

i. 20 ஆம் நூற்றாண்டு

ii. 21 ஆம் நூற்றாண்டு

iii. 22 ஆம் நூற்றாண்டு

47. கோலத்திற்கு ஏற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான எண்ணை தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | ... |
| 8 | 1 | 6 |

i. 4

ii. 9

iii. 7

பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.

48. பத்து + ஆறு = .......................

49. மணி + ஓசை = .......................

50. பனி + பொழிவு = .......................

**44ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



**நேரம் 1 மணி 15 நிமிடம்**

**வினாப்பத்திரம் II**




ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்


*1.* என்னிடம் நூறு ரூபா தாள் இரண்டும் ஐம்பது ரூபா தாள் மூன்றும் இருபது ரூபா தாள் நான்கும் ஐம்பது சத நாணயங்கள் மூன்றும் உள்ளன. என்னிடம் உள்ள பணத்தொகை எவ்வளவு?

இவ்வுருவின் சுற்றளவு யாது?

*2.*




*3.*




*4.* 3099 இந்த எண்ணுடன் ஒன்றைக் கூட்டும்போது பெறப்படும் எண் யாது?

*5.* காலை 6.30 இற்கு புறப்பட்டு 10.45 மணிக்கு புத்தளம் சென்றடைய வேண்டிய பேருந்து 30 நிமிடங்கள் தாமதித்து வந்தடைந்தது. வந்தடைந்த நேரத்தை எழுதுக.

*6.* 10 மீற்றர் நீளமான ஒரு கம்பியில் இருந்து ஒவ்வொன்றும் 75 cm நீளமுள்ள 12 துண்டுகள் வெட்டப்பட்டன. கம்பியின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது?

*7.* 612 தோடம்பழங்கள் மூன்று சம குவியல்களாகப் பிரிக்கப்பட்டன. இரு குவியல்களில் உள்ள தோடம் பழங்களின் எண்ணிக்கை யாது?

*8.* எண் கோலத்தில் அடுத்து வரும் எண்களை எழுதுக.
1092, 1094, 1096, 1098, ........., .........

*9.* 0 , 7, 0, 8 என்னும் இலக்கங்களைப் பயன்படுத்தி மிகப் பெரிய எண்ணை எழுதுக.

*10.* இவற்றைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.

*11.* 1/3 என்பதன் சமவலுப் பின்னத்தின் கிழ் கீறிடுக.
i. 2/3 ii. 2/4 iii. 6/9

*12.* தண்டில் காய்க்கும் தாவரம் எது?
i. எலுமிச்சை ii. நெல்லி
iii. மாங்காய்

*13.* பின்வருவனவற்றில் புரதம் மிக்க உணவு எது?
i. பருப்பு ii. கீரை
iii. பூசணி

*14.* வெளிநாடு செல்வோரிடம் கட்டாயம் இருக்க வேண்டியது?
i. கடவுச்சீட்டு
ii. தேசிய அடையாள அட்டை
iii. வதிவிட உறுதிப்பத்திரம்

*15.* இறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற செல்ல வேண்டியது?
i. வைத்தியசாலை ii. பிரதேச சபை
iii. பிரதேச செயலகம்

*16.* காலை சூரிய வெளிச்சத்தின் மூலம் உடலில் சேரும் உயிர்ச் சத்து?
i. உயிர்ச்சத்து K ii. உயிர்ச்சத்து B
iii. உயிர்ச்சத்து D

*17.* கூர்மையான பார்வை திறன் உடைய மிருகம் எது?
i. யானை ii. பூனை iii. குதிரை

*18.* மிகத் துல்லியமான சத்தத்தை கேட்கும் திறன் கொண்ட பிராணி எது?
i. முயல் ii. புலி iii. கரடி

*19.* பின்வருவனவற்றில் மின் ஊடகம் அல்லாதது?
i. வானொலி ii. கடிதம்
iii. தொலைக்காட்சி

*20.* பிரதான சாலைகளில் மேம்பாலம் அமைக்கப்படுவதற்கான பிரதான காரணம்?
i. வாகனம் பயணிக்க
ii. பாதசாரிகள் பாதையை கடக்க
iii. வாகனங்கள் பாதையை கடப்பதற்கு

*21.* இலங்கை மத்திய நாட்டில் அடிக்கடி ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தம் எது?
i. புவி நடுக்கம் ii. காட்டுத்தீ
iii. மண்சரிவு

*22.* இலங்கையில் மிகப் பெரிய மாவட்டம் எது?
i. கொழும்பு ii. புத்தளம்
iii. அனுராதபுரம்

*23.* தாவரங்களில் மிக விரைவாக வளரும் தாவரம் எது?
i. மா ii. தேக்கு
iii. மூங்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. மரவள்ளிக் கிழங்கில் அதிகளவில் அடங்கும் போசாக்கு ?


i. புரதம் ii. காபோவைதரேற்று
iii. விற்றமின்கள்


25. பின்வருவனவற்றுள் ஒற்றை இதழ் பூ எது ?


i. எக்சோரா ii. தாமரை
iii. அந்தூரியம்

26. நவீன விளையாட்டுக்களில் ஒன்று ?

i. கிளித்தட்டு ii. உதைப்பந்தாட்டம்
iii. எல்லே



27. 

28. 


29. 



பின்வரும் முதல் படத்திற்கு பொருந்தாத படத்தின் கீழ் கோடிடுக.

30 


i. ii. iii.

31. 

i. ii. iii.

32. 

i. ii. iii.

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

உன் பாலும் எனக்கு வேணாமடா
உன் பழமும் எனக்கு வேணாமடா
உன் கூட்டைவிட்டு செல்வேனடா
சுதந்திரமாக வாழ்வேனடா

கனி நிறைந்த சோலை செல்வேன்
களிப்புடனே பறந்து செல்வேன்
பாடல் பல பாடி நிற்பேன்
பயமும் இன்றி வாழ்ந்திடுவேன்

33. இப்பாடலை பாடுவதாக கருதப்படுவது எது ?

i. மான் ii. கூண்டுக்கிளி
iii. வண்ணத்துப்பூச்சி

34. 'உன்' என்பதன் பன்மை எது ?

i. உன்கள் ii. உமது
iii. உங்கள்

35. 'சுதந்திரம்' என்பதன் கருத்து யாது ?

i. விடுதலை ii. சுந்தரம்
iii. பாதுகாப்பு

36. 'கனி' என்பதன் எதிர்க்கருத்து சொல் யாது ?

i. பழம் ii. கிளை
iii. காய்

37. இரண்டாம் பாடலில் இடம்பெற்ற சினைப்பெயர் ஒன்று எது ?


i. கண் ii. கனி
iii. பால்

சரியான முறையில் விளக்கும் சொற்கூட்டத்தை தெரிவு செய்க.

38. i. கறுப்பு, பறவை, தாவர உண்ணி
ii. கரையும், பறவை, உயரம்
iii. பறவை, அனைத்துமுண்ணி, கறுப்பு



39. i. பால், சுத்தம், எலி
ii. குட்டி, இறைச்சி, புல்
iii. முட்டை, சுத்தம், வெள்ளை நிறம்



40. i. மின்சாரம், அழுத்தும், ஆடை
ii. மின்சாரம், வீடு, வாகனம்
iii. அழுத்தும், ஆடை, பெட்டி



'வீட்டுத்தோட்டத்தில் பூ மொட்டில் அமர்ந்திருந்த வண்ணத்துப்பூச்சி' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொன்றும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைப்புக்குள் உள்ள சரியான சொல்லை தெரிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

ஒழுக்கம், நன்றன்று, பண்பு, தாய்நாடு, ஒத்து, ஆரோக்கியம், தியாகம்

41. எமது ................. வளமிக்கது.

42. நாம் ஊராரோடு .......... வாழ்தல் அவசியம்.

43. ........... உயிர் வாழ அவசியமானது.

44. ............ உள்ள கல்வியே சிறந்தது.

45. நன்றி மறப்பது .............

பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்தை தருக.

46. பயின்று ..................

47. தோழன் ..................

பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.

48. கலுலேல்ல .....................

49. பரவியா .................

பின்வரும் ஆங்கில சொற்களுக்கான கருத்தை எழுதுக.

50. Pine Apple ..................................

51. Post Office ..................................

எதிர்பாற் கருத்து தருக.

52. ................. குறத்தி

53. உழவன் ................

54. நடிகன் ................

**விடைகள்**

1. ரூ. 361.50
2. 32 cm
3. 32 cm
4. 3100
5. மு.ப. 11.15
6. 100 cm
7. 408
8. 1100, 1102
9. 8700
10. 0078
11. iii
12. ii
13. i
14. i
15. iii
16. iii
17. ii
18. i
19. ii
20. ii
21. iii
22. iii
23. iii
24. ii
25. iii
26. ii
27. பெருநாய்
28. பெருங்கரடி
29. கலப்பை
30. ii
31. i
32. iii
33. ii
34. iii
35. i
36. iii
37. ii
38. iii
39. i
40. i
41. தாய் நாடு
42. ஒத்து
43. ஆரோக்கியம்
44. ஒழுக்கம்
45. நன்றன்று
46. கற்று
47. நண்பன்
48. கரும்பலகை
49. புறா
50. அன்னாசி
51. தபால் கந்தோர்
52. குறவன்
53. உழத்தி
54. நடிகை

**41 ஆம் பக்கத் தொடர்...**

**விடைகள்**

1. ii
2. ii
3. iii
4. iii
5. iii
6. அடி
7. படி
8. நீ
9. ii
10. ஜெயித்திட
11. செம்மை
12. கருமை
13. இம்மை
14. அம்மை
15. பொம்மை
16. கதவு
17. யன்னல்
18. தண்ணீர்
19. முச்சக்கரவண்டி
20. சிலை
21. பாதம்
22. கலை
23. களை
24. கறை
25. கரை
26. i
27. ii
28. i
29. 5/12, 11/12
30. ரூபா 466.75
31. 6 லீற்றர் 625 மில்லி லீற்றர்
    14 லீற்றர் 300 மில்லி லீற்றர்
32. 8
33. xix, ix, xiv
34. 72, 80, 88, 96
35. i
36. ii
37. ii
38. ii
39. 120 100
40. 20 200
41. 3 ரூபாய்
42. 1500 கிராம்
43. 09
44. 480 ரூபாய்
45. 96 $cm^2$ (96 சதுர cm)
46. ii
47. iii
48. பதினாறு
49. மணியோசை
50. பனிப்பொழிவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 09

## தலைப்பு: தேயிலைத் தோட்டம்

### பரிசில்களை பெறும் சித்திரங்கள்



சஹ்னா
வேப்பமடு ம.வி.
புத்தளம்



எம்.ஏ.எப். அப்றா
குளி/அல்ஹுமைறா ம.வி
எதண்டவெல



ஏ. நஸ்ரி ஹரிஸ்
ரஹ்மானியா மு.வி.
வெலிப்பன்ன

### பாராட்டை பெறும் சித்திரங்கள்



என்.எப். அமானி
தி/அல்மினா ம.வி.
மூதூர்



எப். அப்ரா ஸனூன்
ஜெயிலானி ம.க.
பலாங்கொடை



எம்.என்.எப். ரம்லா
குளி/அல் ஹுமைறா மு.வி.
எதண்டவெல



எம்.ஏ. இர்பான்
அசோகா வித்தியாலயம்



எம்.ஐ.எப். மின்ஹா
குளி/மடிகே மிதியால மு.ம.க.
பண்டாரகொஸ்வத்த



எம்.ஆர். ராயிக்
புத்தளம்




ஸப்னா நிஸவ்விர்
பலாந்தை மு.வி.
அகலவத்த




ஐ.எப். நிஹ்லா
க/ஹைன்போட் மாபாகந்த மு.வி.
நாவலப்பிட்டி



கே.இஸட். ஸாகிரா
குளி/அல் ஹுமைறா மு.வி.
எதண்டவெல



ஐ. ஆயிஷா
அன்நூர் ம.க.
ரிதீகம



எப். இபாமா
பெலந்த மு.வி.



எம்.எப்.எப். ஸஹ்ரா
பு/பாத்திமா மகளிர் ம.க.
புத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org